எண்ணித் துணிக கருமம்

அண்ணாவின்
கையெழுத்துக் கருவூலம்

[illegible] [illegible] [illegible]

[illegible] [illegible]

நாற்பதாண்டுகள் நான் கட்டிக்காத்த
அண்ணா தந்த கருவூலம்!

திருச்சியில் 1956 ஆம் ஆண்டு நடைபெற்ற தி.மு.க. மாநில மாநாட்டில்; கழகம் தேர்தலில் ஈடுபட்டு ஆட்சி மன்றங்களில் இடம் பெறலாமா? என்ற கேள்வியை முன்வைத்து அறிஞர் அண்ணா அவர்கள் ஒரு வாக்கெடுப்பு நடத்தினார். தேர்தலில் ஈடுபடலாம் என்பதற்கு மாநாட்டில் கூடியிருந்தோரின் முக்கால் பகுதியினர் வாக்குகள் கிடைத்த காரணத்தால்;

1957 ஆம் ஆண்டு நடைபெற்ற இரண்டாவது பொதுத் தேர்தலில் தி.மு.க. களம் புகுந்தது. அந்தத் தேர்தலில் பாராளுமன்ற வேட்பாளர்களாக நிறுத்தப்பட்ட சொல்லின் செல்வர் ஈ.வெ.கி. சம்பத் அவர்களும், திருவண்ணாமலை தீரர் தர்மலிங்கமும் வெற்றி பெற்றனர். சட்டப் பேரவைத் தேர்தலில் அண்ணா உள்ளிட்ட 15 பேர் வெற்றி பெற்று தமிழக அரசியல் அரங்கையே ஆச்சரியத்தில் ஆழ்த்தினோம்.

அடுத்து 1962 ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்றப் பொதுத்தேர்தலில் காஞ்சித் தொகுதியில் அண்ணா வெற்றி வாயப்பை இழந்தார் எனினும் தி.மு.க. சார்பில் 50 பேர் வெற்றி பெற்று, பிரதான எதிர்க்கட்சியாகப் பேரவையில் அமர்ந்தோம்.

1957 ஆம் ஆண்டு கழகம் பெற்ற வெற்றி; ஆளுங்கட்சியான காங்கிரசுக்கு ஆச்சரியத்தை உண்டு பண்ணியது என்றால், 1962 ல் கழகம் பெற்ற வெற்றி அகில இந்திய அளவில் காங்கிரசுக்கு அதிர்ச்சியை உண்டாக்கியது எனலாம். கழக வளர்ச்சியை முடக்க என்ன செய்யலாமெனத் திட்டம் தீட்டத் தொடங்கினர் டெல்லிப் பட்டணத்தில்!

அதிர்ச்சியின் அளவைக் காங்கிரசுக்கு மேலும் அதிகப்படுத்தும் விதமாக அப்போது திருவண்ணாமலையில் நடைபெற்ற சட்டமன்ற இடைத்தேர்தலில், பெருந்தலைவர் காமராசர் அவர்களே நேரடியாக இறங்கிப் பணியாற்றிய நிலையிலும் தி.மு.க. வேட்பாளர் ப. உ. சண்முகம் அவர்கள் வெற்றி பெற்றார்.

இனி தி.மு.க.வை ஒழித்துக் கட்டாமல் விடக் கூடாது என்று காங்கிரஸ் கட்சியின் டெல்லி மேலிடமும் – தமிழகக் காங்கிரஸ் தலைவர்களும் கூடிப் பேசி; கொண்டு வந்தனர் ஒரு சட்டத்தை!

அந்தச் சட்டம் நடைமுறைக்கு வந்துவிட்டால்; தி. மு. கழகம் பிரிவினைக் கொள்கையைப் பேச முடியாது – பேசினால் கழகமே இருக்க முடியாது – இப்படி ஒரு சூழ்நிலையில், “சுவரா? சித்திரமா?” என்ற கேள்விக்கு விடை காண ஆழ்ந்த சிந்தனையில் கழகத்தினர் இருந்தபோது; அதுபற்றிய விவாதம் அரசியல் வட்டாரத்தில் சூடுபிடித்துக் கொண்டிருந்தபோது – தி.மு. கழகத்தின் பொதுக்குழு 1963 ம் ஆண்டு சூன் திங்கள் 8,9,10 நாட்களில் கூட்டப் பெற்றது.

அந்தப் பொதுக்குழுவில் இந்தச் சிக்கலான பிரச்னைக்குத் தீர்வு காண ஆரோக்கியமான விவாதம் நடைபெற வேண்டுமென்று விரும்பிய அண்ணா அவர்கள், அக்குழுவில் அவர் பேச எண்ணியதை முன் கூட்டியே ஒரு பெரிய நோட்டுப் புத்தகத்தில் தனது கைப்படவே எழுதி வைத்துக் கொண்டார். பொதுக்குழுவில் பேசும்போது பெரும்பகுதி; அவர் தன் கைப்பட எழுதி வைத்திருந்ததை அடிப்படையாக வைத்தே கருத்துகளை அள்ளிப் பொழிந்தார்.

திராவிட இயக்க வரலாற்றிலும் – தமிழக அரசியலிலும் ஒரு திருப்பு முனையாக அமைந்த அந்த பொதுக்குழுவில் அண்ணா பேசுவதற்காக அவரே எழுதித் தயாரித்த அந்த உரையை பொதுக்குழு முடிந்த பிறகு என்னிடம் ஒப்படைத்தார்.

அண்ணாவின் அந்தக் கையெழுத்துப் பிரதியை நாற்பது ஆண்டுகளாகப் பாதுகாத்து வைத்துள்ள நான்; அதனை இப்பொழுது நாற்பது ஆண்டுகளுக்குப் பிறகு வெளியிட விரும்புகிறேன்.

அரசியல் வரலாற்றையே மாற்றிய அந்தப் பொதுக்குழுவின் முடிவையும் – அக்குழுவில் அண்ணா நிகழ்த்திய அற்புதமான விளக்க உரையையும் – படித்துணர ஒர் அருமையான வாய்ப்பு; ‘முரசொலி’ வாயிலாக, வருகிற மே திங்கள் 3 ந்தேதி முதல் கழக உடன்பிறப்புகளுக்கும் – அரசியல் ஆர்வலர்களுக்கும் கிடைக்க இருக்கிறது.

அந்தப் பொதுக்குழுவில் அண்ணா ஆற்றிய உரையில் குறிப்பிட்டிருப்பது போல பொதுக்குழு உறுப்பினர்கள் நீண்ட நேரம் விவாதித்து அண்ணாவின் வேண்டுகோளுக்கிணங்க மனம் விட்டுப் பேசி அண்ணாவின் கருத்துப்படி தி.மு. கழக சட்ட திட்டப் புத்தகத்தில்; இன்றளவும் இடம் பெற்றுள்ள,

குறிக்கோள்

அறிஞர் அண்ணா வகுத்த குறிக்கோளுக்கு ஏற்ப தமிழகம், ஆந்திரம், கேரளம், கருநாடகம் ஆகிய நான்கு மொழி வழி மாநிலங்களிலும் இந்திய அரசுரிமை ஒருமைத்தன்மை, அரசியல் அமைப்புச் சட்டம் ஆகியவற்றுக்கு உட்பட்டு நெருங்கிய திராவிட கலாச்சார கூட்டுறவு நிலவப் பாடுபடுவது; அரசியல் நிர்ணயச் சட்டத்தில் முழு நம்பிக்கையும், பற்றுறுதியும் கொண்டு சமதர்மம், சமயச் சார்பின்மை, ஜனநாயகம் ஆகிய லட்சியங்களில் முழு ஈடுபாடும், பற்றும் கொண்டு இந்திய நாட்டின் இறையாண்மை, ஒற்றுமை, ஒருமைப்பாடு ஆகியவற்றைக் கட்டிக் காப்பது;

கோட்பாடு

அறிஞர் அண்ணா அறிவுறுத்திய கடமை – கண்ணியம் - கட்டுப்பாடு அடிப்படையில், அரசியலில் ஜனநாயக உரிமைகளைப் பாதுகாத்து, ஆதிக்கமற்ற சமுதாயத்தை அமைத்திடவும்; பகுத்தறிவு அடிப்படையில் மறுமலர்ச்சிக்கான சீர்திருத்தப் பணி ஆற்றிடவும்; பொருளாதாரத் துறையில் வறுமையை வென்று; சமதர்ம அடிப்படையில் எல்லோரும் நல்வாழ்வு பெற வழிவகை கண்டிடவும்; பிறமொழி ஆதிக்கத்திற்கு இடங்கொடாமல் அந்தந்த மாநில மொழிகளை வளர்த்திடவும், அவைகளுக்கான உரிய இடத்தைப் பெற்றுத் தரவும்; மத்திய அரசில் குவிந்து கிடக்கும் அதிகாரங்கள் பரவலாக்கப்பட்டு, மாநிலங்களில் சுயாட்சியும் – மத்தியில் கூட்டாட்சியும் (Autonomy for States and Federation at Centre) உருவாகிடவும் தொண்டாற்றுவது என்று திருத்தப்பட்டு; அதுவே இன்றைக்கும் நமது கழகத்தின் கொள்கை, குறிக்கோள், கோட்பாடுகளாக அமைந்துள்ளன.

இந்தத் திருத்தம் தி.மு. கழகச் சட்டதிட்டத்தில் இடம்பெற; அண்ணா ஆற்றிய பொதுக்குழு உரை எவ்வாறு வழிகாட்டுதலாக அமைந்தது எனபதை அவரது கையெழுத்துப் பிரதி வாயிலாக ‘முரசொலி’ வெளியிடுவது; அனைவருக்கும் அரிய வாய்ப்பு.

கழகத்தின் கடந்த கால வரலாற்றையும் – நாம் கடந்து வந்த பாதையையும் – அந்தக் கரடுமுரடான பாதையில் நமது கரம் பிடித்து நமது அண்ணா அவர்கள் எப்படி நம்மை அழைத்து வந்துள்ளார் எனபதையும் உன் போன்றோர்க்கு விளக்கிடவே அண்ணா என் கையில் ஒப்படைத்துச் சென்ற அந்தக் கருவூலத்தை மே 3 முதல் வெளியிடுகிறேன்.

நாம் நடந்து வந்த பாதையை அறிந்துகொள்ள, அண்ணா வழியைப் புரிந்துகொள்ள; நமது குறிக்கோள், கோட்பாடு இவற்றில் தெளிவாக விளங்கி அவ்வாறே செயல்பட இது பயன்படும் என்று நம்புகிறேன்.

அன்புள்ள,

மு. க.

(1.5.2003)

குறிப்பு :-

அண்ணா எழுதித் தந்த உரையடங்கிய அந்த நோட்டுப் புத்தகத்தின் தலைப்பு; “எண்ணித் துணிக கருமம்” என்பதாகும். அதனால்தான் இத்தொடருக்கு அவர் கையெழுத்தையே தலைப்பாகச் சூட்டியுள்ளேன்.

பதிப்பு வரலாறு

உடன்பிறப்பே,

எதிர்ப்படும் நண்பர்களோ, உடன்பிறப்புகளோ எவராயினும் கேட்கின்றனர்; எப்படி “எண்ணித் துணிக கருமம்” என்ற தலைப்பில் அண்ணா அவர்களே தன் கைப்பட எழுதிய அந்த நோட்டுப் புத்தகத்தை 40 ஆண்டுகள் பாதுகாத்து வந்தீர்கள் என்று!

தமிழில் மட்டுமல்ல; ஆங்கிலத்திலும் அதே கருத்தை அவர் கைப்பட ஒரு நோட்டுப் புத்தகத்தில் எழுதியிருந்தார். அதை என் அன்புக் கண்மணியும், அண்ணாவின் இதயத்தில் சிறந்த இடம் பெற்றவருமான தம்பி முரசொலி மாறனிடம் கொடுத்து வைத்திருந்தார். அதில் சில பக்கங்களை அவர் வீட்டில் கறையான் நுகரத் தொடங்கிய காரணத்தால் அந்தக் கையெழுத்துப் பிரதியை மாறன், முரசொலி அலுவலகத்தில் பத்திரப்படுத்தியிருந்தார். 1991 ஆம் ஆண்டு ஆளுநர் ஆட்சியில் மாற்றுக் கட்சிக் குண்டர்கள் முரசொலி அலுவலகத்தைத் தீக்கிரையாக்கியபோது, முரசொலி பைல்கள், புத்தகங்களுடன் அண்ணாவின் அந்த ஆங்கிலக் கையெழுத்துப் பிரதியும் சாம்பலாக்கப்பட்டுவிட்டது.

அனைத்து ஆபத்துகளையும் தாண்டி என்னிடம் பத்திரமாகப் பாதுகாக்கப்பட்டதுதான் அண்ணா எழுதிய 301 பக்கங்கள் கொண்ட இந்தக் கையெழுத்துப் பிரதி நோட்டுப் புத்தகம் “எண்ணித் துணிக கருமம்” என்பதாகும்.

இது தி. மு. கழகத்தின் பலம் – பலவீனம் இரண்டையும் ஒளிவு மறைவின்றி அண்ணா அவர்களால் படம் பிடித்துக் காட்டப்படும் நேர்மையான விமர்சனம் என்றே எடுத்துக் கொள்ளலாம்.

தன் வலிமையும் – மாற்றார் வலிமையும் களம் புகும் முன் கணக்கிடப்படல் வேண்டும் என்ற கருத்துக்கு உரம் சேர்க்கும் அறிவுரைப் பெட்டகமே அண்ணாவின் இந்தக் கையெழுத்து ஏடு!

அடக்குமுறையேற்கக் கூடிய – தியாகம் செய்யக் கூடிய – இழப்புகளை சந்தித்துத் தீரவேண்டிய எந்தவொரு போராட்டமாயினும்; அதனை அண்ணா அவர்கள்; தன்னுடைய அல்லது தன்னுடன் இருக்கக் கூடிய நாலைந்து பேர்களின் மனத்திண்மையை மட்டும் கணக்கில் கொண்டு அந்தக் களத்தில் அவசரப்பட்டு இறங்குவதில்லை. அவர் தலைமையேற்றிருந்த கால கட்டத்தில் கல்லக்குடி போராட்டம் – குலக்கல்வி எதிர்ப்புப் போராட்டம் – ரயில் நிறுத்தப் போராட்டம் – இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராட்டம் – விலைவாசி உயர்வு எதிர்ப்புப் போராட்டம் என எத்தனையோ போராட்டங்கள் நடைபெற்றிருக்கின்றன.

ஆனால் பிரிவினைத் தடைச் சட்டத்தை எதிர்த்து ஒரு போராட்டம் நடத்துவதென்றால்; கழகத்தினர் வாழ்வு பறிபோகும் என்பதுடன் கழகமே பறிபோகும் என்ற உண்மையை;

எவ்வளவு வலிவுமிக்க வாதங்களை எடுத்து வைத்து அண்ணா கருத்தறிவித்தார் என்பதை இந்த “எண்ணித் துணிக கருமம்!” என்ற அவரது கையெழுத்து உரை தெளிவாக்குகிறது.

“ஆகா! திராவிட நாடு கொள்கையை விட்டு விட்டார்கள், கோழைகள்!” என்று சில கட்சியினர் எள்ளி நகையாடினர். அப்போதும்; காங்கிரஸ் கட்சியின் சார்பில் அமைச்சராக இருந்த பெரியவர் பக்தவத்சலம் அவர்கள்; பிரிவினைக் கோரிக்கையை தி.மு.க. கைவிட்டுவிட்டு; இந்திய ஒருமைப்பாட்டில் நம்பிக்கை கொண்டு நாட்டின் ஒற்றுமைக்கும் பாதுகாப்புக்கும் ஒத்துழைப்பு தர முன்வந்தமைக்காகப் பாராட்டு தெரிவிப்பதாக அறிவித்தார்.

அவரையும் மீறி அவரது காங்கிரஸ் கட்சியினர் – மற்றும் மாற்று முகாமில் இருந்தோர் – தி. மு. க. எடுத்த முடிவு குறித்துப் பழித்தும் இழித்தும் பேசாமல் இல்லை. அவர்களின் நோக்கம் என்ன என்பதை அறிந்திருந்த அண்ணா அவர்கள் அதையும் இந்தக் கையெழுத்துக் கருவூலத்தில் ஆங்காங்கு சுட்டிக்காட்டத் தவறவில்லை.

● இந்தக் கருவூலத்தை இவ்வளவு நாள் வெளியிடாமல் இருந்த காரணம் என்ன?
● எப்படி இத்தனை நாள் பத்திரப்படுத்தினாய்?

இந்தக் கேள்விகள் நிரம்ப எழத்தான் செய்யும்; எழுகின்றன!

என்னிடம் பத்திரமாக இருக்கும் வேறு சில விஷயங்கள் எல்லாவற்றையுமே வெளியிட்டுவிட முடியுமா? அவை எத்தனை பேருடைய முகத்தை சுளிக்க வைக்கும்; அகத்தை சுருங்க வைக்கும்! அதனால்தான் அவற்றை விடுத்து யாருக்கும் இடர் விளைவிக்காத ஒரு அரசியல் வரலாற்று ஏட்டினை அண்ணாவின் கையெழுத்து கொண்டே நாளை மே 3 ஆம் நாள் முதல் முரசொலியில் வெளியிடுகிறேன்.

இந்தக் கையெழுத்துப் பிரதி நோட்டுப் புத்தகத்தை மத்திய நல்வாழ்வுத் துறை இணை அமைச்சர் தம்பி ராஜாவிடம் நேற்றைய தினம் இரவு காட்டினேன். அண்ணாவின் கையெழுத்துக்களை ஒரு சேர இத்தனை பக்கங்களைப் பார்த்ததும்; அவர் உணர்ச்சிவசப்பட்டு அந்த எழுத்துகளைத் தொட்டுக் கும்பிட்டதும் கண்களில் ஒற்றிக் கொண்டதும் நினைவில் நிலைத்துவிட்ட நிகழ்ச்சியாகும்.

நாற்பதாண்டு காலம் கண் போலக் காத்த இந்தக் கருவூலத்தை இனியும் வெளியிடாமல் இருப்பதா? எப்போது வெளியிடலாம்? என்று என்னைத் துளைத்துக் கொண்டிருந்த கேள்விக்கு; இதனை வெளியிடுவதற்கான உரிய நேரம் இதுதான் என்று விடை கிடைத்தது.

எனவே இப்போது வெளியிடப்படுகிறது. இதனை நமதியக்கப் பயணத்தில் எதிர்ப்பட்ட திருப்பு முனையில் எவ்வளவு திறமையுடன் சமாளித்து விபத்தின்றி கழக வாகனத்தை அண்ணா செலுத்தினார் என்பதற்கு இந்தக் கருவூலமே கண்கண்ட சான்று.

இளைய தலைமுறையினர்க்கு இப்போதெல்லாம் இது போன்ற விஷயங்களை – வரலாற்று உண்மைகளைத் தெரிந்து கொள்ளும் ஆர்வம் குறைந்து வருவது; நான் எண்ணி வருந்துகின்றவற்றில் ஒன்றாகும்.

இனியாவது கழக உடன்பிறப்புகளும் இளைய தலைமுறையினரும் இழந்துவிட்ட அந்த ஆர்வத்தை – ஒதுக்கி வைத்துள்ள அந்த அக்கறையை – திரும்ப் பெற்று திராவிட இயக்கத்துக்கு எல்லா வகையிலும் அறிவு வளம் சேர்த்திட வாரீர் என அழைக்கிறேன்.

அன்புள்ள,

மு. க.

உடன்பிறப்பே,

40 ஆண்டுகளுக்கு முன்பு 1963-ல்
திராவிட முன்னேற்றக் கழகம், பிரிவினைக் கொள்கை
யைக் கைவிட்ட [illegible]
[illegible]
[illegible]
அண்ணா அவர்கள் "எண்ணித் துணிக கருமம்" என்ற
தலைப்பில் [illegible]
[illegible]

[illegible]
[illegible]
[illegible]
[illegible] ..... [illegible]!.....

அன்புள்ள
மு.க.

26-3-2003

உடன்பிறப்பே,

40 ஆண்டுகளுக்கு முன்பு 1963 இல் திராவிட முன்னேற்றக் கழகம், பிரிவினைக் கோரிக்கையைக் கைவிட்டதையொட்டி அப்போது நடைபெற்ற கழகப் பொதுக்குழுவில் பொதுக்குழு உறுப்பினர்கள் மனம் விட்டு விவாதிப்பதற்கென நமது தலைவர் அறிஞர் அண்ணா அவர்கள் “எண்ணித் துணிக கருமம்” என்ற தலைப்பில் அவரது கைப்பட எழுதிய உரையை வெளியிடப் போவதாக அறிவித்திருந்தேன்.

நம் இதய வேந்தர் அன்று எழுதியதை என் கையில் ஒப்படைத்தார். இன்று இந்தக் கருத்துக் கருவூலத்தை உன் கையில் ஒப்படைக்கிறேன். சிந்திக்க….. செயல்பட!......

அன்புள்ள

மு.க.

மே-3-2003

எண்ணித் துணிக

கருமம்

திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு, இப்போது, ஒரு புதிய, முற்றிலும் தனித்தன்மை வாய்ந்த நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது.

பிரிவினைப் பேச்சைத் தடை செய்யும் விதமாக, இந்திய அரசியல் சட்டம் திருத்தப்படுகிறது.

இன்று உள்ள இந்திய அரசியல் சட்டம், ‘திராவிட நாடு’ கேட்பதற்கான பேச்சுரிமை தருவதாக இருக்கிறது, எனவே பிரிவினை பேசுவோர் மீது நடவடிக்கை எடுக்க முனைந்தால், இந்திய அரசியல் சட்டத்தின் பேச்சுரிமையை எடுத்துக் காட்டி வாதிடவும், வழக்கில் வெற்றி பெறவும் வழி இருக்கிறது.

இதுபற்றி, சட்ட விற்பன்னர்களைக் கலந்து பார்த்த பிறகே இந்த முடிவுக்கு சர்க்கார் வந்தார்கள்.



இனி, பிரிவினை பேசுவோர் மீது நடவடிக்கை எடுக்க சர்க்கார் முனையும்போது, பேச்சுரிமையைக் காரணம் காட்டி வாதாட முடியாது.

பிரிவினைக்காக இனிப் பேசும் உரிமை, தனி ஆட்களுக்கும், பலர் கூடிடும் அமைப்புக்கும் இனி கிடைக்காது.

பிரிவினையை நோக்கமாகக் கொண்டு, ஒரு பேச்சு இருக்கவும் முடியாது, ஒரு அமைப்பு இயங்கவும் முடியாது.

மீறிப்பேசினால், என்ன விதமான தண்டனை விதிப்பது, மீறி ஒரு அமைப்பு இயங்கி வந்தால், அதனை எவ்விதம் கலைப்பது அல்லது அதில் உள்ளோர் மீது எவ்விதமான தண்டனை விதிப்பது என்பது பற்றி ஒரு புதிய சட்டம் விரைவில் நிறைவேற்றப்படும்.

இது மட்டும் போதாது என்று எண்ணி, சர்க்கார் இத்துடன் மற்றோர் விதியையும், சட்டத்தில் புகுத்தியுள்ளனர்.

பிரிவினை பேசுபவர்களை, தேர்தலுக்கு நிற்க முடியாதபடி தடுப்பது இந்த விதியின் நோக்கம்.

திராவிடநாடு பெற நான் பாடுபடுபவன் என்று கூறிக்கொண்டு யாரும் தேர்தலுக்கு நிற்க அனுமதி கிடைக்காது.

தேர்தலுக்கு நிற்க விரும்பும் போது, அவர்களைத் தேர்தல் அதிகாரியே கேட்பார் – திராவிட நாடு பிரிவினை உமது திட்டமா என்று. ஆம் என்று சொன்னால், தேர்தலுக்கு நிற்க அனுமதி கிடைக்காது; மறுக்கப்பட்டுவிடும்.

ஆக, இந்தப் புதிய சட்டம்;

1. திராவிட நாடு பிரிவினைக்கான பிரசாரத்தைத் தடுக்கிறது.
2. திராவிடநாடு பிரிவினைக்காக ஒரு அமைப்பு, கட்சி இயங்குவதைத் தடுக்கிறது.
3. திராவிடநாடு பிரிவினைப் பிரச்சனையை வைத்து தேர்தலில் நிற்க முடியாதபடியும் செய்து விடுகிறது.

சுருக்கமாகச் சொல்வதானால், இந்தப் புதிய சட்டம், திராவிடநாடு பிரிவினைப் பிரசாரத்தையும், அந்தப் பிரசாரத்தில் ஈடுபட்டுள்ள தி.மு. கழகத்தையும், அழித்துவிட முனைகிறது.

தி. மு. கழகம் பிரிவினைப் பிரசாரமும் செய்ய இடம் இல்லை.

தி. மு. கழகம், சட்ட மன்றம், பாராளுமன்றம் சென்று இடம் பெறவும் வழி அடைக்கப்பட்டு விடுகிறது.

திராவிடநாடு பெறும் வழி என்ன என்பது பற்றி நாம் யோசித்தபோது,

வேட்டுமுறையா?

ஓட்டுமுறையா?

என்று பார்த்ததில் எல்லாக் காரணங்களையும் சீர்தூக்கிப் பார்த்து, திராவிடநாடு பெற

ஓட்டுமுறை

மேற்கொள்ளப்பட வேண்டும் என்று முடிவு செய்தோம். அதன்படியே வேலை செய்து வந்ததில், கடந்த பொதுத்தேர்தலில்

34 இலட்சம்

வாக்காளர்களின் ஆதரவு பெற்றோம். 1967 தேர்தலில், நமக்குக் கிடைக்கக்கூடிய ஓட்டுகள் இரட்டிப்பு ஆகக்கூடும் என்ற நம்பிக்கையும் கொண்டிருக்கிறோம்.

நாம் நம்பிக்கைக் கொண்டிருப்பது மட்டுமல்ல, பிற கட்சிகளும், நிலைமைகளைக் கவனித்து, அடுத்து வரும் பொதுத்தேர்தலில், தி. மு. கழகம் மிகப்பெரிய அளவு வெற்றி பெறும் என்று கூறுகின்றன.

தி. மு. க ஆளுங்கட்சி ஆகிவிடக்கூடும் என்று கூறுவாரும் உளர்.

புதிய சட்டத்தின் விளைவாக, இந்த எண்ணங்கள் யாவும் மண்ணாகிப் போகின்றன.

பிரிவினைக் கொள்கையுடன் ஒரு அமைப்பு இயங்கவும் வழி இல்லை, அந்தக் கொள்கையுடன் தேர்தலுக்கு நிற்கவும் அனுமதி இல்லை.

ஆக, பிரசாரம், அமைப்பு, சட்டமன்றத்தில் இடம் பெற்றல் கிடைக்கத்தக்க ஓட்டுமுறை எனும் யாவும், ஒழிக்கப்பட்டுவிட சட்டம் வந்திருக்கிறது.

வேட்டுமுறையை முன்பே ஒதுக்கிவிட்டோம்.

வேட்டுமுறையை மேற்கொள்ள என்றும் ஒருப்படப் போவதில்லை.

ஓட்டுமுறை மேற்கொண்டோம். அதிலே படிப்படியான முன்னேற்றம் கண்டோம். அடுத்துவரும் தேர்தலில், மிகப்பெரிய பலன் கிடைக்கும் என்று நம்புகிறோம் - இந்நிலையில் ஓட்டுமுறையும், சட்டத்தால் பறிக்கப்பட்டுப் போகிறது.

தி. மு. கழகத்தை ஒடுக்க, பிரசாரம் செய்வோர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கத்தக்க சட்டம் கொண்டுவர சர்க்கார் முயற்சிப்பார்கள் என்று நாம் எதிர்பார்த்தவர்கள்; அடக்குமுறையை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற உறுதியைத் தெரிவித்தவர்கள்.

அத்தகைய அடக்குமுறை ஏற்பட்டு, பலர் தம்மைப் பலி கொடுத்துக் கொள்வதன் மூலம், கொள்கை உரம் பெறும், மக்களின் அன்பும் ஆதரவும் கிடைக்கும், அடக்குமுறையை ஏற்றுக் கொள்வோரிடம் பாசம் கொண்டு, பல இலட்சக் கணக்கானவர்கள் தி. மு. கழகத்துக்கு ஆதரவாளர்கள் ஆவர், அவர்களின் ஆதரவினால், தேர்தலில் தி. மு. கழகம், வெற்றி மேல் வெற்றி பெறும், அந்த வெற்றிகளின் மூலம், தி. மு. கழகக் கொள்கைகளுக்கு, நாட்டு மக்கள் தந்து வரும் ஆதரவு எப்படி வளர்ந்து வருகிறது என்பதனை உலகம் உணரும், உலகம் உணருவதால் எற்படும் நிலைமை, அரசினரின் அடக்கு

முறைப் போக்கிலே ஒரு மாற்றத்தை ஏற்படுத்தும், என்பது நமது எண்ணம்; நமது விளக்கம்.

அரைக்க அரைக்கச் சந்தனம் மணக்கும் என்றும் அடிக்க அடிக்க பந்து எழும்பும் என்றும் நாம் சொன்னதன் பொருளும் இதை ஒட்டித்தான்; அடக்குமுறைக் கொடுமையை ஏற்றுக்கொள்ள ஏற்றுக்கொள்ள, கொள்கையிடம் மக்கள் காட்டும் ஆதரவு பெருகும், அதன் காரணமாக கழகம் செல்வாக்குப் பெறும், அந்தச் செல்வாக்கு காரணமாக, திராவிடநாடு கொள்கை வெற்றி அடையும் என்பதுதான் பொருள்.

சந்தனம், அரைக்கப் படாமல், நெருப்பில் வீசப்படுமானால், கிளம்பிடும் மணம் பயன் தருவதாக அமையாது.

இப்போது கொண்டு வரப்பட்டுள்ள சட்டம், சந்தனத்தை அரைப்பதாக அமையவில்லை, சந்தனக்கட்டையை நெருப்பில் எறிவதாக அமைகிறது.

இயங்கும் ஒரு அமைப்பு இருக்க இடம் தரவில்லை, சட்டம்.

இப்போது உள்ள அமைப்பு மட்டுமல்ல, இனி எப்போது, எவர் கூடி, இதற்காக ஒரு அமைப்பு ஏற்படுத்தினாலும், அந்த அமைப்பு, சட்டத்தின் காரணமாக அழிக்கப்படும்.

நாம், அடக்குமுறையை எதிர்த்து நிற்பது என்ற உறுதி காட்டியபோது, நமது கழகம் மேற்கொள்ளும் நடவடிக்கைகளை ஒடுக்க சட்டம் வரும் என்று எதிர்பார்த்தோம். இப்போது வந்திருப்பதோ, கழக நடவடிக்கையை ஒடுக்குவது அல்ல, கழகத்தின் மூலாதாரக் கொள்கையை, கழக அமைப்பை, கழகம் தேர்தலில் ஈடுபடுவதை; இம்மூன்றையும் ஒடுக்கிவிடுவதாக அமைந்திருக்கிறது.

கழகத்தைத் தடை செய்ய ஒரு சட்டம் வந்திருந்தால் கூடப் பரவாயில்லை – ஏனெனில், தடை செய்யப்பட்ட கழகம், சில ஆண்டுகளோ, பல ஆண்டுகளோ, ஆன பிறகு, மீண்டும் இயங்க வழி ஏற்படக்கூடும்.

ஆனால், இப்போது வந்திருக்கும் சட்டம், பிரிவினை பேசும்போதெல்லாம் தண்டனை. பிரிவினைக்காக ஒரு அமைப்பு ஏற்படுத்தும் போதெல்லாம் தண்டனை. பிரிவினைக்காக, தேர்தலில் நிற்க விரும்பும் போதெல்லாம் அனுமதி மறுப்பு, என்ற முறையில் இருக்கிறது.

இந்த முழுவடிவத்தையும் முழுப்பொருளையும் நன்கு அறிந்த பிறகே, என்ன செய்வது என்பது பற்றி யோசிக்க வேண்டுமேயன்றி, தடைச் சட்டம் வந்திருக்கிறது, உடைத்தெறிவோம் என்று எண்ணிக் கொள்வதிலே, பொருள் இல்லை, பலன் கிடைக்காது, பொறுப்பானதாகவும் அத்தகைய போக்கைக் கருத முடியாது.

வந்திருக்கும் நிலைமை, தி. மு. கழகம்,தடைச் சட்டத்தை மீறுவதன் மூலம், பிரிவினையைப் பேசலாம், ஒரு முறை – கடைசி முறை என்ற அளவில்!

பிரிவினைக்காகத்தான் இந்த அமைப்பு என்று கூறி, அதன் காரணமாக அதில் உள்ளவர்கள் பேரில் நடவடிக்கை எடுத்தும், கழக இதழ்கள், இடங்கள் ஆகியவற்றைப் பறிமுதல் செய்தும் சர்க்காராக கழகத்தை உடைத்தெறிய இடம் ஏற்படச் செய்யலாம். ஆனால்

மீண்டும் ஒரு அமைப்பு எழாது; எழ வழி கோலியதும், இதே நிலை அதற்கும். தேர்தலில், பிரிவினை இடம் பெறச் செய்ய இயலாது.

வேறுவகையிலே இதைக் கூறுவதானால், கடைசி தாக்குதல் – தீரமான போர் – இறுதி - என்ற முறையில், கட்டங்கள் அமையும்.

சட்டத்தை எதிர்த்துத் திராவிடநாடு பிரிவினைக்காகப் பேசியவர்கள், அமைப்பு நடத்துபவர்கள், சிறையிலிருந்து வெளிவரும் வரையில் வெளியே, பிரிவினைப் பிரசாரம் இருக்காது, பிரிவினைக் கொள்கைக்கான அமைப்பு இயங்காது. சிறையிலிருந்து வெளிவந்ததும், அவர்கள் மீண்டும், பிரிவினைப் பிரசாரம் செய்ய, பிரிவினைக் கொள்கைக்காக அமைப்பு ஏற்படுத்த முனையலாம்; முனைந்ததும் மீண்டும் சட்டம் குறுக்கிடும்; மீண்டும் சிறை; மீண்டும் வெளியே பிரிவினைப் பிரசாரம் இருக்காது, பிரிவினைக்கான அமைப்பு இயங்காது.

தண்டனை ஐந்து ஆண்டுகள் என்று கணக்குக்காக வைத்துக் கொண்டு பார்த்தால், பிரிவினைப் பிரசாரம் ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை, ஒரு நாள், நடத்தப்பட வழி ஏற்படும்.

பிரசாரம் என்று, இதனைக் கொள்ள முடியாது; தடையை மீறுதல் என்றுதான் பொருள்படும்.

பிரசாரம் என்பது, தொடர்ந்து நடத்தப்படுவது; விட்டு விட்டு அல்ல; சில ஆண்டுக்கு ஒரு முறை அல்ல.

பிரசாரம் என்பது, விளக்கம் – எதிர்ப்புக்கு மறுப்பு – மனமாற்றம் ஏற்படுத்துவது
– ஆதரவு திரட்டுவது – என அமைவது. சில ஆண்டுகளுக்கு ஒரு முறை தடை மீறப்படும் நிகழ்ச்சியாக இருப்பது, பிரசாரம் அல்ல.

இதனையும் நாம் மறந்துவிடக் கூடாது.

ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை, ஒரு தடவை, பிரிவினை பேச வாய்ப்பு கிடைக்கும் அளவுக்குக் கூட, தேர்தலில் நிற்க, வாய்ப்பு கிடைக்காது.

ஆக, முன்பு எடுத்துக் காட்டியபடி, சட்டத்தை எதிர்த்து நிற்பது என்றால், கடைசி கட்டத்துக்கு நாம், நமது மனதைத் தயாராக்கிக் கொள்ள வேண்டும்.

கழகம் அழிக்கப்பட்டுப் போவது பற்றி, நாம் நமது மனதுக்கு சாந்தி தேடிக்கொள்ள வேண்டும்.

ஓட்டுமுறையை மேற்கொள்வது என்பது பற்றிய நம்பிக்கை பறிக்கப்பட்டு விடுவதற்கு இடம் தர வேண்டும்.

சுருங்கச் சொன்னால், தனி ஆள், தற்கொலை செய்து கொள்ள, சில நிலைமை காரணமாக ஒரு முடிவுக்கு வருவது போல, தி. மு. கழகம் தன்னைத் தானே அழித்துக் கொள்ள முன் வரவேண்டும்.

அதன் காரணமாகவும் அதற்குப் பிறகும்,

நாட்டிலே பெருங்கொந்தளிப்பு ஏற்படலாம்.

தி.மு. கழகம் புதிது புதிதாக அமைக்கப்படலாம்

தடை மீறி, பிரிவினைப் பிரசாரம் செய்தபடி இருக்க, தொடர்ந்து, பல ஆண்டுகளுக்கு கொள்கையாளர் கிளம்பியபடி இருக்கலாம்.

கிளர்ச்சிகள் வலிவு பெற்று, சர்க்காருக்குச் சங்கடம் ஏற்பட்டு, அவர்களே தடைச் சட்டத்தை ரத்து செய்யலாம்.

என்ற பல கூறத்தோன்றும்; பலர் கூறுவர்; சிலர் கூறுகின்றனர்.

இவைகளெல்லாம் நடைபெறும் என்று எதிர்பார்த்து, இப்போது, தடைச் சட்டத்தை எதிர்த்து நிற்பது என்பது, மனதுக்குத் தெம்பு தரும், ஐயம் இல்லை; ஆனால் இவை நடைபெறாவிட்டால், இவை நடைபெறும் என்று நம்பிக் கொண்டு தெம்பாக, சிறை சென்றவர்கள், மனம் உடைந்து வெளியே வருகிற நிலைமை ஏற்பட்டு விடுமானால், தாங்க முடியாத வேதனையாகிவிடும்.

இவைகள் நடைபெற வேண்டுமானால், முதலில் பொதுமக்கள் மனதில் கொந்தளிப்பும், நம்மைப் பற்றிய உருக்கமும் ஏற்படத்தக்க அளவுக்கு, தடைச்சட்டத்தை எதிர்த்து நீண்டகாலச் சிறைவாசத்துக்குத் தம்மை உட்படுத்திக் கொள்ளக் கூடியவர்களின் தொகை,

ஒரு இலட்சம்

அல்லது, மிகக்குறைவான கணக்கே போதும் என்று எடுத்துக் கொண்டாலும்

50000 வேண்டும்.

இவ்வளவு பேராகிலும் கடுஞ்சிறைவாசத்தைப் பல ஆண்டுகள் மேற்கொள்ள முன்வருகின்றனர் என்றால்தான், தடைச்சட்டத்தை மீறுவதற்கு ஒரு மதிப்பு கிடைக்கும்; மக்களிடம் நம்மைப் பற்றிய உருக்கமும், சர்க்கார் பற்றி கசப்பும் கொந்தளிக்கும்.

இந்த எண்ணிக்கை கிடைக்க வழி இருக்கிறதா?

இந்த எண்ணிக்கை கிடைக்கத்தக்க விதத்தில், திட்டமிட தோழர்களைத் திரட்ட, தேவைப்படும் காலம் கிடைக்குமா?

இதற்கான முயற்சியில் முக்கியமானவர்கள் ஈடுபட முனையும்போது, சர்க்கார் அவர்களைச் சும்மா விட்டுவைக்குமா?

தடையை மீறுவது எப்படி, தண்டிக்கப்படத்தக்க குற்றமாகிறதோ, அதே போல, தடையை மீறச்சொல்லி, ஆர்வம் காட்டுவது, பிரசாரம் செய்வது, தோழர்களைத் திரட்டுவது, ஆகியவைகளும் குற்றமேயாகும்.

இதற்குத் தேவைப்படும் காலம் நமக்குக் கிடைக்கத்தக்க முறையில் சர்க்கார் இருந்துவிடும் என்று நான் கருதவில்லை.

என்னைப் பொறுத்தவரையில், குறிப்பிடப்பட்டுள்ள எண்ணிக்கை கிடைப்பதே இயலாது என்பதுதான் இப்போது என் எண்ணமாக இருந்துவருகிறது.

ஆர்வக்குறைவு, கஷ்டநஷ்டம் ஏற்பதிலே தளர்ச்சி, கொள்கையிலே பிடித்தமற்ற போக்கு, என்னிடம் பற்றுக் குறைவு – இவை அல்ல, பெரும்பாலானவர்கள், கடுந்தண்டனை ஏற்கத் தயங்குவதற்கான காரணங்கள்.

நமது கழகத்தில் ஈடுபடுபவர்களில், மிகப்பெரும்பாலானவர்கள் ஏழைகள், நடுத்தர வகுப்பினர், சிறுகடை நடத்துவோர், மாத ஊதியம் பெறுவோர், தினக்கூலி – இப்படிப்பட்டவர்கள்.

இவர்கள், உழைத்துத்தான் தத்தமது குடும்பத்தைக் காப்பாற்றித் தீர வேண்டிய நிலை இருக்கிறது.

இவர்கள் சில ஆண்டுகள் சிறையில் இருந்தாலும், தன்னைத்தானே காப்பாற்றிக் கொள்ளக்கூடிய நிலையில் அந்தக் குடும்பங்கள் இல்லை.

அப்படிப்பட்ட குடும்பங்களைக் காப்பாற்றும் பொறுப்பு ஏற்றுக்கொள்ளும் நிலையில், கழகமும் இல்லை.

சில தோழர்களின் மறைவால், குடும்பம் கதியற்று போகும்போது, கைகொடுத்து உதவ, கழகம் இப்போது எடுத்துக் கொள்ளும் முயற்சியே, வர வர, கடினமானதாகி வருகிறது.

காங்கிரஸ், திலகர் சுயராஜ்ய நிதி போன்றவைகளைத் திரட்டி வைத்துக் கொண்டிருந்ததாலும், பெரிய புள்ளிகள் காங்கிரசுக்கு பக்கபலமாக இருந்ததாலும், சிறை சென்ற தோழர்களின், குடும்ப் பாதுகாப்புக்காக ஓரளவு பண உதவி செய்ய முடிந்தது.

சிறையிலே தாங்கள் கஷ்டப்பட்டாலும், குடும்பம் கலகலத்துப் போகவில்லை என்ற நினைப்பு சிறையிலுள்ளோருக்கு, மன நிம்மதியைக் கொடுத்தது.

அன்றாடம் பாடுபட்டுப் பணம் பெற்றுக் குடும்பத்தைக் காப்பாற்றித் தீரவேண்டியவர்கள் அல்ல, டாக்டர், வக்கீல், வாணிபக் குடும்பத்தினர், நிலச்சுவார்தார், ஆகியவர்களே பெரும்பாலும் நீண்டகாலச் சிறைவாசம் ஏற்றுக்கொண்டனர்.

நமது கழகத்து நிலைமை அவ்விதம் இல்லை. நீண்டகாலச் சிறைவாசத்தின் காரணமாக, பல குடும்பங்கள் சிதறுண்டுப் போய்விடக்கூடும்.

ஏதாகிலும் ஓரளவு உதவியாவது திரட்டித்தர வழிகிடைத்தாலும் அதனைச் செய்ய, கழகம் இல்லை; ஏனெனில், சட்டம் காரணமாக கழகம் இயங்கப் போவதில்லை.

இந்தநிலையில், ஐம்பதாயிரம் பேர் நீண்டகாலச் சிறைக்கும், தமது குடும்பங்கள் பற்றிய கவலையற்ற மனப்போக்குக் கொள்பவர்களாக கிடைக்க வேண்டும். கிடைப்பார்களா?

கிடைப்பார்கள் என்று ஆர்வம் காரணமாகக் கூறுபவர்கள், கிடைக்கவில்லை என்பதை அனுபவத்திலே காண்பார்களானால், மனம் உடையும் நிலை பெறுவர், கொள்கையிலே

அவநம்பிக்கை ஏற்படும், பொதுவாழ்வு என்பதன் மீதே அருவருப்பு ஏற்படும், பொதுமக்களிடமே வெறுப்பு கொள்வர்.

கிடைக்கத்தக்க விதமாக நமது கழக அமைப்பு இல்லை என்பதை உணரும் போது, திடுக்கிட நேரிடும், ஆனால் நிலைமை அதுதான் – அதனை மறைத்துப் பயன் இல்லை. புண்ணை புனுகு கொண்டு மறைத்தல் கூடாது.

இந்த என் எண்ணம் வலிவு பெற்றதற்குக் காரணம், ஜூலை போராட்டம், எனக்குத் தந்த கசப்புள்ள அனுபவமாகும்.

நான் திருப்தி அடையத்தக்க விதத்தில் நிலைமை அமையவில்லை என்பதை நான் மறைக்க விரும்பவில்லை.

முன்கூட்டித் திட்டமிடாதது, போதுமான முன்னேற்பாடுகள் செய்து கொள்ளாதது, ஜூலை கிளர்ச்சியிலே நாம் கண்ட சரிவுக்கு ஓரளவு காரணம் – உணருகிறேன்.

ஆனால் நிச்சயமாக தண்டனை சில மாதங்களுக்குத்தான் என்று திட்டவட்டமாகத் தெரிந்திருந்த நிலையிலும், கிளர்ச்சியிலே ஈடுபடும் ஆர்வமும், சிறையிலே அடைபட்டுக் கிடக்க ஒருப்படும் மனப்பாங்கும், எவ்வளவு குறைவாக இருந்தது என்பதை எண்ணிப் பார்க்கும்போது, நீண்டகாலச் சிறைவாசம் மேற்கொள்ளும் துணிவுடனும், குடும்ப நிலைபற்றி கலங்காத போக்குடனும், ஐம்பதனாயிரம் பேர் அல்ல, ஐந்து ஆயிரம் பேராகினும் கிடைப்பார்களா என்பதில் எனக்கு மிகுந்த ஐயப்பாடு – அதனை நான் மறைக்க இயலவில்லை – மிக முக்கியமான நேரத்தில் அதனை மறைப்பது தீதும் கூட.

குறைந்தது 50 ஆயிரம் பேராவது, தடையை மீறினால், கழகமே அழிக்கப்பட்டுப் போனாலும், வரலாறு சிறப்பானதாக அமையும், மதிப்பு மங்காது.

எண்ணிக்கையும் குறைந்து, கழகமும் கலைந்து போனால் காலத்துக்கும், இழிநிலை, பழிச்சொல் நமக்கெல்லாம்.

என்னமோ என்று எண்ணிக் கொண்டிருந்தோம், இவ்வளவுதானா, தி. மு. க.? என்று எங்கும் ஏளனம் கிளம்பும்.

சிறையில் உள்ளவர்கள் இதனையும் தாங்கிக் கொண்டு, கழகம் கலைவதையும் பார்த்துக் கொண்டு, மீண்டும் பணியாற்றும் மனநிலை பெற முடியும் என்று நான் எண்ணவில்லை. இந்நிலையில் பிரிவினைப் பிரசாரம் நின்றுவிடுவது, கழக அமைப்பு கலைந்து போவது, தேர்தலில் ஈடுபட வழி இல்லாது போவது என்பது மட்டும் அல்லாமல், சிறை சென்றவர்கள், பிறகு, செயலற்றுப் போய்விடும் பரிதாபகரமான நிலைமையும் ஏற்பட்டுவிடும்.

எண்ணிக்கை மிகவும் குறைந்து போனால், தடை மீறும் நிகழ்ச்சிக்கு மதிப்பு இல்லாது போவதுடன், பொதுமக்கள் மனதில் ஒரு உருக்கமோ, கொந்தளிப்போ, ஏற்படாது.

எத்தனையோ நிகழ்ச்சிகளிலே இதுவும் ஒன்று என்ற அளவிலும், எத்தனையோ கொடுமைகளை காங்கிரஸ் செய்கிறது, அதிலே இதுவும் ஒன்று என்ற முறையிலும், பொதுமக்கள் ‘தடை மீறல் நிகழ்ச்சி’ பற்றிப் பேசுவார்கள், பரிந்து பேச முற்பட மாட்டார்கள்.

இப்போது நாம் யோசித்த வரையில், ஏற்படக்கூடிய நிலைமை எப்படி இருக்கும் என்பதை நினைவுபடுத்திக் கொள்வோம்.

தடைச்சட்டம் அமுலுக்கு வருகிறது
மீறிச்சிலர், பிரிவினைப் பிரசாரம் செய்கிறார்கள், சிறை செல்கிறார்கள்.
கழக அமைப்பு கலைகிறது
சிறை செல்லாதவர்கள் கழகத்தை விட்டு விலகுகிறார்கள்.
சிறையில் அடைபட்டவர்கள், வேறு பலர் தடை மீறவில்லையே என்ற வருத்தத்தைச் சுமந்து கொண்டு இருக்கிறார்கள்.
கழகம் கலைந்து போன நிலையில், பிரிவினை பேசுவோர் கிடைக்காத நிலையில், சிறையிலிருந்து வெளி வருகிறார்கள்.
மனம் உடைந்த நிலையில் இதில் பலர் பொதுவாழ்வுத் துறையை விட்டே விலகிக் கொள்கிறார்கள்.
மிகச்சிலர், மீண்டும் பிரிவினை பேசி, சிறை செல்கிறார்கள். பொதுவாழ்வுத்துறையில் கழகம் இல்லை.
பொதுவாழ்வுத்துறையில் பிரிவினை பற்றிய பிரசாரம் இல்லை.
திட்டமிடாமல், விளைவு பற்றிய கணக்கு எடுக்காமல், மனித இயல்பினை ஆராயாமல், கழகத் தோழர்களின் மனப்பாங்கினை கவனிக்காமல், தடை மீறினால் ஏற்படக்கூடிய நிலை இது. இனி, பொதுமக்கள், கிளர்ச்சி நடத்தி, சர்க்காரின் போக்கை மாற்றத்தக்க நிலைமை ஏற்படுத்துவார்களா என்பதனைக் கவனிக்கலாம்.
ஒரு இலட்சம் பேராவது சிறைப்பட்டால், பொதுமக்கள் மனம் கொந்தளிக்கும் என்று குறிப்பிட்டேன்.
இந்தக் கொந்தளிப்பு பொதுமக்களிடம் ஏற்பட்டால்;
1. அலைஅலையாகப் பலர் தடைமீறக் கிளம்பலாம்.
2. கண்டனக்கிளர்ச்சிகள் நடத்தலாம்; கலகம் விளையலாம்.
3. ஆட்சியாளர்களைப் பதவியில் இருந்து கீழே இறக்க முனையலாம்.
இவை நடைபெறலாம் என்று நினைக்கும் போது, சுவையாக இருக்கிறது – இருக்கும். ஆனால் பொதுமக்கள் - என்று நாம் இப்போது குறிப்பிடுவது யாரை? என்றால்
தடையை மீற வேண்டும் என்ற துடிப்பு கொண்டவர்கள் போக, மீதமுள்ளவர்களில், வேறு கட்சிகளில் ஈடுபடாத, பொதுத்துறையில் நாட்டம் செலுத்துகிற மக்களை. இவர்களின் எண்ணிக்கை எவ்வளவு இருக்கும் – இயல்பு எவ்விதம் அமையும் என்பதனையும் கணக்கிட்டு அறிய வேண்டும்.
குடும்பக்கவலையற்று பல ஆண்டு சிறைவாசம் ஏற்க 50 ஆயிரம் பேர்கள் கிடைப்பது கடினம், அதற்கான திட்டமிட நேரம் இல்லை, சர்க்கார் விட்டு வைக்காது என்ற

கருத்துடைய நான், தடையை மீற நமக்குப் பிறகு – அலை அலையாக மக்கள் முன்வருவர், என்பதனை நினைத்துப் பார்க்கக்கூட முடியவில்லை.

இப்போது அந்த எழுச்சி, ஆர்வம் எழாதிருக்கலாம், ஆனால் நாமெல்லாம் சிறைப்பட்ட பிறகு, ஆர்வம் கொழுந்துவிட்டுக் கிளம்பும் என்று கூறுவார்களானால், நான் அதனை எங்கனம் ஏற்றுக் கொள்ளத் துணிவு பெற இயலும்?

பொதுமக்களின் மனம் நெகிழத்தக்க அளவுக்காகிலும், நம்மில் பல ஆயிரவர் சிறை சென்றால்;

கண்டனக் கிளர்ச்சிகள் நடத்தலாம்.

கலகம் எழலாம்.

நம்மிடம் பற்று கொண்ட சிலர், வெளியே இருந்தால் மட்டுமே, இது கூட ஏற்பட இயலும்.

ஏற்படும்போது, அது மாபெரும் புரட்சியாகி, ஆட்சி கவிழ்க்கப்படும், என்றெல்லாம் எண்ணி என்னை நானே ஏமாற்றிக் கொள்ளத் தயாரில் இல்லை.

கிளர்ச்சிகள் நடக்கும் – கண்டன ஊர்வலம் – கடை அடைப்பு போன்றன.

தடியடி, துப்பாக்கிப் பிரயோகம் என்ற முறைகளைச் சர்க்கார் மேற்கொள்ளும்.

சில மணி நேரத்தில் நிலைமை கட்டுக்கு அடங்கியதாக அறிவிக்கப்பட்டவிடும். கண்டனக் கிளர்ச்சியை ஒடுக்க, சர்க்கார் மேலும் சில கொடுமைகளை மேற்கொள்ளும், அந்தக் கொடுமைகளைத் தாங்கிக் கொள்ள இயலாத நிலையில், கிளர்ச்சி நடத்தினோர் ஓய்ந்து போவர்.

இவ்வளவுதான் நடைபெறக்கூடும் – இதற்கும், நம்மிடம் பற்றும் பாசமும் கொண்ட சிலராவது, நம்மோடு சிறைக்கு வந்துவிடாமல், வெளியே இருந்தால்.

இல்லையென்றால், செய்தி படித்து, வருத்தம் கொண்டு, பொதுமக்கள்; திகைத்துப்போய் நிற்பர்; செயலாற்ற முனையமாட்டார்கள்.

அலை அலையாகத் தடை மீறுவதைவிட, கண்டனக் கிளர்ச்சிகள் நடத்துவதைவிட பொதுமக்கள், ஆட்சியில் உள்ளவர்களை கீழே இறக்கும் காரியத்தைச் செய்ய முடியும்.

ஒவ்வொரு மனக்கசப்பு ஏற்படும்போதும், பொதுமக்கள், இந்த எண்ணம்தான் கொள்கிறார்கள் - பதவி கிடைத்துவிட்டதால் ஆட்டமெல்லாம் ஆடுகிறார்கள் – இருக்கட்டும் – இருக்கட்டும் – அடுத்த தேர்தல் வரட்டும் – இவர்களை கீழே இறக்கி விடுகிறோம்! – என்று பேசுகிறார்கள்.

இது சட்டப்படி அனுமதிக்கப்பட்டுள்ள உரிமை.

இதனைச் செய்வதில் பொதுமக்கள் சிறைவாசக் கொடுமையைப் பெறப்போவதில்லை - எனவே தீரமாகப் பணியாற்றக்கூடும்; வெற்றி கிட்டக்கூடும்.

பொதுவாழ்வுத்துறைக்கென அமைந்துள்ள இலக்கணமே இதுதான் – கொடுமைகளை எதிர்த்து கஷ்டநஷ்டம் ஏற்பவர்கள் சிலர் – அவர்கள் தமக்காக கஷ்டநஷ்டம் ஏற்றனர் என்பது

அறிந்து, உருகி, அவர்களிடம் ஆதரவு காட்டவும், அவர்களை கொடுமைக்கு ஆளாக்கினோரிடம் வெறுப்பு கொள்ளவும், பல்லாயிரவர், அவர்கள் தமக்குச் சட்டப்படி கிடைக்கும் உரிமையைப் பயன்படுத்தி, தேர்தலில் கொடுமையாளர்களை விரட்டி விடுவது
– இதுதான் பொதுவான நடைமுறை.

பொதுமக்களுக்கு, நம்மிடமோ, நாம் கூறும் கொள்கையிடமோ, பற்றும் பாசமும் இருந்தால், இது ஏற்படக்கூடும்.

கொடுமையான சட்டம் இயற்றி, நியாயமான உரிமைகளுக்காகப் போராடுபவர்களைச் சிறையிலிட்டு வாட்டினால், பொதுமக்கள் மனம் கொதித்து, அடுத்தத் தேர்தலில், தம்மை வீழ்த்திவிடுவார்கள் என்ற அச்சமே, கொடுமை செய்யும்போதெல்லாம் ஆட்சியாளர்களுக்கு ஏற்படுகிறது.

ஆத்திரம் காரணமாக இந்த அச்சத்தைக்கூடத் துச்சமென்று கருதி, கொடுமை புரிபவர் உண்டு, அவர்களை பொதுமக்கள், ‘ஓட்டுமுறை’யால் விரட்டுகிறார்கள்.

நம்முடைய நிலையோ மிகப் பரிதாபகரமானதாகிறது

ஆட்சியாளர்களின் கொடுமைக்கு ஆளாகிறோம், அது கண்டு பொதுமக்கள் கொதிப்பு அடைகின்றனர்; அந்தக் கொதிப்பை வேறுவகையிலே காட்ட இயலாத நிலையினரானதால், அடுத்த தேர்தல் வரட்டும் என்று காத்துக் கொண்டுள்ளனர், கொடுமையாளரைத் தண்டிக்க; கொடுமைக்கு ஆளான நம்மை ஆதரிக்க! அடுத்த தேர்தல் வருகிற போதோ, நாம் இல்லை , தேர்தலில் ! ஏனெனில், பிரிவினை பேசுவோர் தேர்தலுக்கு நிற்பதும் தடுக்கப் பட்டுவிடுகிறது.

பொதுமக்கள் என்ன செய்யமுடியும்?

காங்கிரசாட்சி, நம்மைக் கொடுமைப்படுத்தவும், நமது கழகத்தை அழிக்கவும் திட்டமிடுகிறது, அதேபோது, இந்தக் கொடுமை செய்வதற்காக, தீர்ப்பளிக்கும் உரிமை பெற்ற பொதுமக்களிடம் நாம் முறையிட, நியாயம் கேட்க, நீதி பெற இருக்கும் வழியையும் அடைத்து விடுகிறது.

ஆட்சியிலுள்ளோர் தம்மை எதிர்ப்பவர்களைக் கொடுமை செய்தால், அதனை எதிர்த்து வழக்காடும் நேரம், தேர்தல் காலம்! தீர்ப்பு அளிக்கும் நீதிபதிகள், பொதுமக்கள்!

நமக்கு வழக்காடும் வாய்ப்பும் இல்லை; தேர்தலில் நாம் ஈடுபடுவது தடுக்கப்படுவதால்!

நமக்குத் தண்டனை தரப்படுவது மட்டுமல்ல, எதிர்த்து பொதுமக்கள் மன்றத்தில் வழக்காடும் உரிமையும் பறிக்கப்படுகிறது.

நியாயமா அல்லவா என்று சீர்தூக்கிப் பார்க்கும், வேலையும் பொதுமக்களிடமிருந்து பறிக்கப்படுகிறது.

பொதுமக்கள் நம்முடைய பிரச்சினையைப் பொறுத்தவரையில், நீதிபதிகளாக இருக்கும் உரிமையை இழந்து விடுகிறார்கள்.

இந்த நிலைமை இருப்பதால், ஆட்சியாளர், நம்மை என்ன கொடுமை செய்தாலும், ஏன் என்று கேட்கவும் ஆளில்லை, விசாரனை நடத்த வழி இல்லை, நல்ல தீர்ப்பளிக்கும் உரிமையும் பொதுமக்களுக்குக் கிடைக்கவில்லை.

இந்நிலையில், உள்ளபடி, நாம் கொடுமைப் படுத்தப்படுவது கண்டு, மனம் குமுறினாலும் பொதுமக்கள், ஏதும் செய்ய முடியாது – நமக்காக.

நமக்காக ஏதும் செய்ய முடியாத நிலையில், நம்மிடம் இருக்கும் பரிவும் நமக்குப் பயன்பட முடியாத நிலையில், பொதுமக்கள் செய்யக் கூடியதெல்லாம், கொடுமை செய்து நம்மை அழித்த காங்கிரசுக்கு அடுத்த தேர்தலில் ஓட்டு போட முடியாது என்று கூறுவது ஒன்றுதான்.

நம்மிடம் காட்ட வேண்டிய பரிவு, வேறு யாருக்காவது காட்டப்படும் – அவர்கள் காங்கிரசுக்கு எதிராக கட்சி நடத்துபவர்களானால்.

பொதுமக்கள் காங்கிரசிடம் கொண்டுள்ள வெறுப்பையும், கொடுமைக்கு ஆளான நம்மிடம் கொண்டுள்ள பரிவினையும், பயன்படுத்திக் கொள்ள வேறு சில கட்சிகள் முனையும்.

அந்த முயற்சியில், சில கட்சிகள் வெற்றி பெறவும் கூடும்.

கொடுமைக்கு ஆளான நம்மிடம் பரிவு காட்டுவதன் மூலமும், நம்மை விடுவிக்க முயற்சிப்போம் என்று பேசுவதன் மூலமும், நம்மிடம் பரிவு கொண்ட மக்களின் ஓட்டுகளை அந்த கட்சிகள் எளிதாகப் பெற முடியும்.

வெற்றி, அந்த கட்சிகளுக்குக் கிடைப்பதன் மூலம், நாம் எந்தக் கொள்கைக்காகக் கொடுமைகளை ஏற்றுக் கொண்டோமோ, அந்த கொள்கைகள் வெற்றி பெறுமா என்றால், வெற்றி கிட்டாது; ஏனென்றால், நம்மைக் காட்டி பொதுமக்களிடம் ஓட்டு பெறுபவர்கள், நம்முடைய கொள்கையை, திராவிடநாடு பிரிவினையை ஒப்புக்கொண்டவர்கள் அல்ல; ஒப்பக்கொள்ளவும் மாட்டார்கள்; ஒப்புக் கொண்டால், அவர்களும் தேர்தலில் நிற்க முடியாது; நம்மோடு சிறையில் இருக்க வேண்டும்.

ஆகவே திராவிடநாடு கேட்காத, திராவிடநாடு கொள்கையைக் கொள்ளாத சில கட்சிகள், திராவிடநாடு கேட்பதற்காக, சிறையில் கொடுமைப்படுத்தப்படும், தி. மு. கழகத்திடம் பற்று கொண்ட பொதுமக்களின் ஓட்டுகளைப் பெறுகிற, விசித்திரம் ஏற்பட்டுவிடுகிறது.

இது எந்த வகையிலும் நம்முடைய நிலைமையையோ; நம்முடைய திராவிடநாடு கொள்கையையோ, சீராக்காது, பலன் நமக்கு இல்லை. சம்பந்தமில்லாதவர்கள் பலன் பெறுகிறார்கள்.

கொள்கைக்காகக் கஷ்டநஷ்டம் ஏற்கும் துணிவு பெறுவதற்கு எந்த கட்சியினரும் தயாராக இருப்பதற்குக் காரணம், பொதுமக்களின் தீர்ப்பு எப்படியும் நியாயத்தின் பக்கம் இருக்கும் என்ற நம்பிக்கையினால்தான். பொதுமக்களின் தீர்ப்புக்கு ஏற்றபடிதான் ஒரு ஜனநாயக ஆட்சி இயங்க வேண்டும். அந்த தீர்ப்பு அளிக்கும் நாளே, தேர்தல் நாள்.

நமது பிரச்சினையைப் பொறுத்தவரையில் அந்தத் தீர்ப்பு நாள் முறையே இல்லை. எனவேதான் நாம் இப்போது சந்திக்க வேண்டிய பிரச்சினை, அலாதியானது என்று கூறினேன்.

நாம் இதற்கு முன்பு இப்படி ஒரு பிரச்சினையைச் சந்தித்ததில்லை என்பது மட்டுமல்ல, எந்தக் கட்சியும் இது போன்ற பிரச்சினையைச் சந்தித்ததில்லை.

பல கட்சிகள், அடக்குமுறையைச் சந்தித்திருக்கின்றன; எதிர்த்து நின்றிருக்கின்றன; வெற்றி பெற்றிருக்கின்றன; ஆனால் அவைகள் யாவும் கட்சிகள் மேற்கொண்ட நேரடி நடவடிக்கைகளை ஒடுக்க ஏற்பட்ட அடக்கு முறைகள். கட்சிகளின் அடிப்படைக் கொள்கையை ஒடுக்க அல்ல.

கட்சிகள் மேற்கொண்ட நேரடி நடவடிக்கைகளை ஒடுக்க அடக்குமுறை மேற்கொள்ளப்பட்ட போது, அதனைத் தாங்கிக் கொண்டதால், கட்சியின் மதிப்பும் செல்வாக்கும் உயர்ந்தது. கட்சி, பிறகு தடுக்கப்பட்ட நேரடி நடவடிக்கையை நிறுத்திக் கொண்டு, புதிய வலிவு பெற்று, அடிப்படைக் கொள்கைக்காகப் பணியாற்றவும், வெற்றி பெறவும் முடிந்தது.

எந்தக் கட்சி மீதும் அது கொண்டுள்ள அடிப்படைக் கொள்கைக்காக, அடக்குமுறை வீசப்படவில்லை.

உதாரணம் காங்கிரஸ் கட்சி, சுயராஜ்யம் கேட்பதை தடுக்க எந்தச் சட்டமும் பிறப்பிக்கப்படவில்லை.

சுயராஜ்யம் பற்றிப் பேசுவது சட்ட விரோதமாக்கப்பட்டு, அதற்காக தண்டனைத் தரப்படவில்லை.

சுயராஜ்யக் கொள்கைக்காக ஒரு கட்சி இயங்கக்கூடாது என்று, சட்டம் வரவில்லை.

சுயராஜ்யம் கேட்க, சுயராஜ்ய நோக்கத்துக்காக ஒரு கட்சி இயங்க, சட்டம் உரிமை அளித்தது.

உப்பு காய்ச்சுவது, வரி கொடா இயக்கம், சட்டமறுப்பு, துணிக்கடை மறியல், அன்னிய நாட்டுச் சாமான்களைக் கொளுத்துதல், போன்ற நடவடிக்கைகள், தண்டனைக்குரியனவாக்கப்பட்டன.

சுயராஜ்யம் வேண்டும் என்று பிரசாரம் செய்ய அனுமதி தந்தனர்.

சுயராஜ்யம் கேட்பவர்கள் அந்த இலட்சியத்துக்காக தேர்தலில் நிற்கவும் உரிமை பெற்றனர்.

எனவே காங்கிரசார், நேரடி நடவடிக்கையில் ஈடுபட்டதால், சட்டம் தாக்கிற்றே தவிர, காங்கிரசைச் செயலற்ற தாக்கிவிடவில்லை.

அடக்குமுறைக்கு ஆளானதால் ஏற்பட்ட புதிய செல்வாக்குடன், மூலாதாரக் கொள்கையான சுயராஜ்யத்துக்காகக் காங்கிரஸ் மும்முரமாக வேலை செய்ய வழி கிடைத்தது.

அடக்குமுறையால் தாக்கப்பட்ட காங்கிரசிடம் மக்கள் அன்பு காட்டினர், ஆதரவு அளித்தனர்.

அடக்குமுறை நடத்திய ஆங்கில அரசு மீது ஆத்திரம் கொண்டனர்.

தேர்தலில் நிற்கும் உரிமை பறிக்கப்படாததால் அடக்குமுறைக் கொடுமைக்குப் பிறகு, காங்கிரசார் தேர்தலில் ஈடுபட்டபோது, மக்கள் ஆதரவு நிரம்பக் கிடைத்தது.

அடக்குமுறை நடத்திய ஆங்கில அரசை வீழ்த்தத்தக்க வலிவு காங்கிரஸ் கட்சிக்குக் கிடைத்தது.இந்த நிலை, நமக்குக் கிடைக்கவில்லை.

நமது நேரடி நடவடிக்கைகள் மட்டும் தடுக்கப்படவில்லை - மூலாதாரக் கொள்கை தடுக்கப்படுகிறது; மூலாதாரக் கொள்கையுடன் ஒரு கட்சி இயங்குவது தடுக்கப்படுகிறது. மூலாதாரக் கொள்கையை வைத்துக் கொண்டு, தேர்தலுக்கு நின்று, பொதுமக்கள் ஆதரவு திரட்டிக் காட்டும், வழி அடைக்கப்படுகிறது.

பிற கட்சிகள் அடக்குமுறையைச் சந்திக்கவில்லையா; எதிர்த்து நிற்வில்லையா; வெற்றி பெறவில்லையா என்று எண்ணம் தோன்றும்போது, இந்த விளக்கத்தை நினைவிற்குக் கொண்டு வரவேண்டும்.

மற்ற எந்தக் கட்சிக்கும் ஏற்படாத ஆபத்து, கழகத்துக்கு வருகிறது; கழகத்தின் மூலாதாரக் கொள்கை பேசுவதற்கே உரிமை இல்லை – மறுக்கப்படுகிறது.

அடக்குமுறையைத் தாங்கிக் கொள்ள முடிகிறதா இல்லையா என்பதல்ல, நமக்கு ஏற்படும் கேள்வி - அடக்குமுறையைத் தாங்கிக் கொண்டாலும், நமக்கு நமது மூலாதாரக் கொள்கை பற்றிப் பேசும் உரிமையும், அதற்காக கட்சி நடத்தும் உரிமையும், அதற்காக தேர்தலுக்கு நிற்கும் உரிமையும், கிடைக்குமா, கிடைக்காதா என்பதுதான் கேள்வி.

கம்யூனிஸ்டு கட்சிக்குக்கூட பொதுஉடைமைப் பிரசாரம் செய்யக் கூடாது என்று தடை வரவில்லை – அவர்களின் பேச்சு உரிமை பறிக்கப்படவில்லை – பொதுஉடைமை திட்டத்தின் பேரில் தேர்தலில் நிற்கும் உரிமை மறுக்கப்படவில்லை.

சட்ட விரோதமாக வேறு பல செயல்களில் ஈடுபட்டபோது அடக்குமுறை வந்தது.

கம்யூனிஸ்டு கட்சியின் மூலாதாரக் கொள்கைக்குத் தடைவிதிக்கவில்லை.

கம்யூனிஸ்டு கட்சி பலாத்கார முறையை மேற்கொண்டபோது, கட்சி தடை செய்யப்பட்டது; கம்யூனிஸ்டுகள் சிறைப்பட்டனர். கம்யூனிஸ்டு கட்சி இயங்கவில்லை; தேர்தலில் நிற்கவில்லை.

ஆனால் பலாத்கார முறையை நீக்கிவிட்டதாகக் கம்யூனிஸ்டு கட்சி அறிவித்ததும், பாராளுமன்ற முறைப்படி, நாட்டின் சட்டதிட்டத்துக்கு உகந்த முறையில், சாத்வீகமாகப் போராடி, பொதுஉடைமை அரசு காணப் போவதாகக் கூறியதும், கம்யூனிஸ்டு கட்சி மீது இருந்த தடை நீக்கப்பட்டது; பொதுஉடைமைப் பிரசாரம் அனுமதிக்கப்பட்டது. தேர்தலில் நிற்கும் உரிமை தரப்பட்டது.

நமக்கு ஏற்ப்பட்டுள்ள நிலை, முற்றிலும் வேறானது. சட்டம் நமது மூலாதாரக் கொள்கையையே தாக்குகிறது.

பேச்சு உரிமை, அமைப்பு உரிமை, தேர்தல் உரிமை இவற்றைப் பறிக்கிறது.

எனவே பிற கட்சிகள் இத்தகைய நிலையில் என்ன செய்தன என்று ஒப்பிட்டு பார்ப்பதிலும் விளக்கம் கிடைக்காது, வழி தெரியாது. நமக்கு ஏற்பட்டுள்ள பிரச்சினை முற்றிலும் மாறானது. இதற்கு ஒப்பாக, எதனையாவது காட்ட வேண்டுமானால் சர்வாதிகார நாடுகளைத்தான் காட்ட முடியும்.

பொதுஉடைமை ஆட்சிமுறையுள்ள, சீனாவில், ரஷியாவில், பொதுஉடைமைக் கட்சி தவிர வேறு கட்சிகள் இல்லை. தடுக்கப்பட்டுப் போய்விட்டன.

பொதுஉடைமை தவிர வேறு கொள்கைகள் கொண்ட கட்சிகள் இயங்க முடியாது. பிரசாரமும் கிடையாது; நடவாது.

பொதுஉடைமைக் கட்சி தவிர, வேறு எந்த கட்சியோ, தனி நபரோ, தேர்தலுக்கு நிற்க, உரிமை கிடையாது; சட்டம் இடம் தராது.

இது போன்று தான் இங்கு, நமக்கு எதிராகக் கொண்டுவரப்படும் சட்டத்தால் ஏற்படும் நிலைமை.

பேச்சு உரிமை, அமைப்பு நடத்தும் உரிமை, தேர்தலில் ஈடுபடும் உரிமை, ஆளுங்கட்சிக்கு மட்டுமே, ரஷியாவில், சீனாவில் இருப்பது போல, புதிய சட்டத்தின் மூலம், நாட்டுப் பிரிவினைப் பிரசாரம், அதற்கான அமைப்பு, அதற்காகத் தேர்தலில் ஈடுபடுவது, என்றுள்ள உரிமைகள் நமக்கு இல்லை என்று சட்டம் ஏற்பட்டுவிட்டது.

தடைமீறி அடக்குமுறையை ஏற்றுக் கொள்வதுதான், வீரத்துக்கு எடுத்துக் காட்டு என்று மட்டும் வாதிடுபவர்கள், வேறுகட்சிகளே கூடாது என்று தடை போடப்பட்டுள்ள நாடுகளில், வீரர்கள், கஷ்டநஷ்டம் ஏற்கக்கூடியவர்கள், பூண்டற்றுப் போய்விட்டனரா? ஏன் அங்கு, அத்தகைய தடைச்சட்டத்தை எதிர்த்து, மீறி, தமக்குப் பிடித்தமான கொள்கை பேச, அதற்கான அமைப்பு இயங்கச் செய்திட, ஒருவரும் முன்வரவில்லை என்பதனை நன்கு கவனித்துப் பார்க்க வேண்டும்.

அடிப்படை தகர்க்கப்படும் விதமான சட்டம் வரும்போது, அதனை மீறுவது, வீரத்துக்கும் தியாகத்துக்கும் மிகச்சிறந்த எடுத்துக்காட்டு ஆகுமேயன்றி, அடிப்படைக் கொள்கை பற்றிய பிரசாரத்தைத் தொடர்ந்து, முறையாக நடத்த வழி காட்டாது. எனவேதான் அடிப்படை உரிமை பறிக்கப்பட்ட நிலையில் இயங்க இயலாது. இயங்க முற்பட்டாலும் பலன் கிட்டாது என்பதனை உணர்ந்து, சர்வாதிகார நாடுகளிலே, கொள்கையாளர்கள் செயலற்றுப் போய்விட்டனர்.

விரல்விட்டு எண்ணக் கூடிய சிலர், தமது உரிமை காத்திட முனைந்தனர் - சிறைப்பட்டனர் – சித்திரவதைக்கு ஆளாயினர் – நாடு கடத்தப்பட்டனர். வணக்கத்துக்குரியவர், வழிபடத்தக்கவர்கள் என்று உலகு பாராட்டும் நிலை பெற்றனர். ஆனால் அதன் காரணமாக, ஆளுங்கட்சி தவிர வேறு கட்சிகளும் இயங்கலாம் என்ற உரிமை கிடைத்துவிடவில்லை.

தியாகிகளின் பட்டியல் நீண்டது; வீரர்களின் பட்டியலில் புதிய பெயர்கள் இணைக்கப்பட்டன.

சீனத்திலும், ரஷியாவிலும் கொள்கைகளையும், கட்சிகளையும் தடுத்துள்ள வேறு அரசுகளிலேயும், உள்ள மக்கள் அத்தனை பேரும், ஆளுங்கட்சியின் கொள்கையை அப்படியே ஏற்றுக்கொண்டார்கள் என்று கூறமுடியாது; மாறுபாடான கருத்து கொண்டவர்கள், சிந்தனையாளர்கள், வேறு கொள்கைகளைக் கொண்டவர்கள் இருக்கத்தான் செய்வார்கள்; ஆனால் அவர்களுக்கு பேச்சு உரிமை, அமைப்பு உரிமை, சட்டப்படி தடுக்கப்பட்டுப் போனதால் அவர்கள் செயலாற்ற முடியவில்லை.

தடை என்றால் உடைத்தெறிய வேண்டாமா என்று கேட்பதிலே சுவை காணலாம். மிக எளிதான கேள்வியாகவும் அது காணப்படும்.

ஆனால் சீனத்திலும், ரஷியாவிலும், வேறு கொள்கை வேறு கட்சிகள், ஏன் எழவில்லை? தடை மீறி, இயங்க ஏன் முடியவில்லை? - என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

எகிப்திலே, நாசரின் கட்டளையை மீறி, வேறு கட்சிகள் இயங்க முடியவில்லை.

அடிப்படை உரிமையைப் பறித்துவிடும்போது, இயங்கும் சக்தி தானாகப் பறிபோகிறது.

அடிப்படை உரிமையை மீண்டும் பெற்றாலொழிய இயங்கும் நிலை ஏற்பட முடியாது.

14 காரட், பிரச்சினையில் எத்துனை மனக்கசப்பு, எதிர்ப்புணர்ச்சி இருக்கிறது என்பது விளக்கமாகத் தெரிகிறது.

ஆனால், அதைமீறி, 18, அல்லது 22 காரட்டில் நகை செய்யத்தான் போகிறேன், என்ன செய்வதானாலும் செய்து கொள், என்று சொல்ல முடிகிறதா என்றால், இல்லை.

கண்டிக்க முடிகிறது, எதிர்ப்பு தெரிவிக்க முடிகிறது. ஆனால் சட்டத்தை முறியடிக்க முடியவில்லை.

எப்போது முறியடிக்க முடியும்? சட்டத்தை எதிர்த்து, சிறை சென்று, கஷ்டநஷ்டம் ஏற்றுக் கொள்வதால் மட்டும் அல்ல.

புதிய சட்டத்தால் ஏற்பட்ட கசப்புணர்ச்சி காரணமாக, அடுத்த தேர்தலில், பொதுமக்கள், இந்தச் சட்டத்துக்கு யார் காரணமோ அவர்களை வீழ்த்திக் காட்டினால், சட்டத்தை மாற்றிட வழி கிடைக்கும்.

ஆனால், 14 காரட் பற்றி சட்டம் போட்டதுடன், அடுத்துவரும் தேர்தலில் இதற்கு மாறான கொள்கை கூறிக்கொண்டு, ஒருவரும் நிற்கக்கூடாது என்றும் சட்டம் ஏற்பட்டுவிடுமானால், அதிருப்தி கொண்ட மக்கள், அடக்கு முறைக்கு ஆளான மக்கள், பரிகாரம் பெற வழி ஏது?

பரிகாரம் பொதுத் தேர்தலில் கிடைக்கும்.

புதிய சட்டமோ, கழகம் பிரிவினை பேசிக் கொண்டு தேர்தலில் நிற்கக் கூடாது என்று கூறுகிறது. ஆகவே

பரிகாரம் பெற , மார்க்கம் இல்லை .

இந்த நிலை காரணமாகத்தான், சர்வாதிகார அரசுகளில், மாற்றுக் கருத்துகள், மாற்றுக் கட்சிகள் இயங்க இடம் கிடைக்கவில்லை - வீரர்களும் விவேகிகளும்

இல்லாததால் அல்ல. வீரர்களும், விவேகிகளும், அந்த நாடுகளை விட்டு வெளியேறி வந்துவிடுவதைக் கூடப் பார்க்கிறோம்.

பிரிவினை பேசினால் கடும்தண்டனை என்று மட்டும் சட்டம் ஏற்பட்டு, அவர்கள் தேர்தலுக்கு நிற்பது தடுக்கப்படாமலிருந்தால், பிரிவினை பேசி, கடும்தண்டனையைப் பலர் ஏற்றுக்கொண்டு, அதேபோது, அடக்குமுறை ஆட்சிக்கு, தேர்தல் மூலம் முடிவு கட்டிவிட முடியும்.

இந்த வாய்ப்பு நமக்கு இல்லை என்பதனை நாம் மறந்துவிடக் கூடாது.

ஆக நாம் தியாகத்தின் பெயரால், வீரத்தின் பெயரால், தடையை மீறினால் நடக்கக் கூடியது எதுவாக இருக்கும் என்றால்,

எல்லையில்லாத,
முடிவு இல்லாத,
காலவரையரை இல்லாத,
பரிகாரம் காண முடியாத
கஷ்டநஷ்டத்தை ஏற்றுக்கொண்டு, சிலரோ, பலரோ தங்கள் வாழ்நாளை இதற்கே தந்துவிட்டு, பின்பற்றுவோர் அற்று, மடிந்து போவர்; அவர்களுடன் அந்தக் கொள்கைக்கான முயற்சியும் மடிந்து போகும்.

திராவிடக் கொள்கையைப் பொறுத்த வரையில் அது வெற்றிபெற, நாம் மேலும் பல ஆண்டுகள் தொடர்ந்து, விரிவாக பிரசாரம் செய்தாக வேண்டும்.

நூற்றுக்கு என்பது பேர், கொள்கையை ஏற்றுக் கொண்டுவிட்ட நிலை அல்ல, இப்போது இருப்பது.

எனவே, இப்போது கொள்கையை அறிந்து ஆதரிப்பவர்களிடம் இருந்து, அடக்கு முறையை எதிர்க்கக் கிளம்புவோர் போக, மீதம் உள்ளவர்கள், அந்தக் கொள்கை பற்றிப் பேசி, வேறு புதிய ஆதரவாளர்களைத் திரட்டப் போவதில்லை.

அவர்களே கூட அந்தக் கொள்கை பற்றிய, நடவடிக்கைகளில் ஈடுபட முடியாது.

இந்நிலையில், அவர்கள், தம்மை மறைத்துக் கொள்ளவோ, கொள்கையை மறந்துவிடவோ, அல்லது மாற்றிக் கொள்ளவோ முனைவர். முனையும் போது, கொள்கைக்காக, அடக்குமுறையை ஏற்றுக் கொண்டவர்கள் பற்றிய நினைவும் நாட்டிலிருந்து மங்கி மறைந்துவிடும்.

காங்கிரசு கட்சிக்கு இந்நிலை ஏற்படவில்லையே – அடக்குமுறைகளால் அழிக்கப்பட்டுப் போய்விடவில்லை – தடை விதிக்கப் பட்டதால் தகர்ந்து போய்விடவில்லை – மீண்டும், மீண்டும் கிளம்பிற்று – புதிய வலிவுடன் - புதிய பொலிவுடன்! - என்று வாதிடலாம்.

ஆனால், முதலிலே நாம் உணர்ந்து கொள்ள வேண்டியது, மூலாதாரக் கொள்கைக்கு காங்கிரசுக்கு ஆபத்து ஏற்படாததால், அது, மீண்டும் இயங்க முடிந்தது என்ற பேருண்மையை.

மற்றோர் காரணமும் உண்டு.

காங்கிரஸ் மறைக்கப்பட்ட போதும், சிறைபடுத்தப்பட்ட போதும், அந்தப் பெயரில் இல்லாமல், எந்த நடவடிக்கையில் ஈடுபட்டால் தண்டனை கிடைக்குமோ அந்த நடவடிக்கையை மேற்கொள்ளாமல், ஆனால், காங்கிரசினுடைய மற்ற கொள்கைகளை, மூலாதாரமான சுயராஜ்ய திட்டத்தை ஆதரித்துப் பிரசாரம் செய்யவும், சிறைப்பட்ட காங்கிரசாரின் வீரத்தை, தியாகத்தைப் பாராட்டவும், பல துணை மன்றங்கள் மும்முரமாகப் பணியாற்றின.

அதன் காரணமாக, தீபம் அனையாத நிலை ஏற்பட்டது.

அதன் காரணமாக, காங்கிரசின் புகழ் ஓங்கிட வழி கிடைத்தது.

அதன் காரணமாக, மக்களின் பரிவு, காங்கிரசிடம் மேலும் அதிகமாக முடிந்தது.

நமக்குள்ள துணை மன்றங்கள் இவ்விதம் இயங்குவன அல்ல.

உத்யோகம் காரணமாகவோ, தொழில் காரணமாகவோ, தி. மு. கழகத்தில் உறுப்பினர் ஆக முடியாதவர்கள், துணை மன்றங்களில் இடம் பெற்று அதன் மூலம், கழகத்துக்கு ஆதரவு தருகின்றனர்.

அவர்கள் தாமாக இயங்கக் கூடியவர்களும் அல்ல; தீவிரமாக நடக்கக் கூடியவர்களும் அல்ல; ஆளங்கட்சியை எதிர்த்து நிற்கக் கூடியவர்களும் அல்ல; சர்க்காருக்கு எதிராகச் செல்லக்கூடியவர்களும் அல்ல.

எனவே கழகம் கலைந்துள்ள போது, கழகச்சார்பாக ஓரளவுக்காகிலும் பணியாற்றும் நிலையும் கிடைக்க வழி இல்லை.

கம்யூனிஸ்டு கட்சி, தடுக்கப்பட்டு இருந்தபோது, பல துணை மன்றங்கள், தொழிலாளர் அணிகள், சட்டத்தின் பிடியில் சிக்காமல், ஓரளவுக்குக் கம்யூனிஸ்டு கட்சிக்கு மக்களின் ஆதரவு கிடைக்கத்தக்க வழி செய்து வந்தன.

வேலை நிறுத்தம், மறியல் போன்ற தீவிர நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு, நெருப்பு அனையாமல் பார்த்துக்கொண்டன.

நமது துணை மன்றத்தினர் அவ்விதமான நடவடிக்கைகளில் ஈடுபடக் கூடியவர்கள் அல்ல.

எனவே, தடை மீறி கழகத்தினர் சிறைப்பட்டு, கழகம், சட்டம் காரணமாக இயங்காதிருக்கும் போது, வேறு எந்த முயற்சியும், நமக்குச் சாதகமாக, வெளியே நடக்க முடியாது.

மற்றோர் விஷயமும் முக்கியமானது.

காங்கிரஸ் கட்சி நடத்தாவிட்டாலும், தனிப்பட்டவர்கள் நடத்தும் பத்திரிக்கைகளில் மிகப் பெரும்பாலானவை, மூலாதாரக் கொள்கையான சுயராஜ்யம் பற்றி, தொடர்ந்து எழுதி வந்தன.

காங்கிரசார் சிறைப்பட்டபோது, இந்த பிரசாரம் குறைந்துவிடவில்லை; வலுவடைந்தது.

சிறைப்பட்ட காங்கிரசாரைப் பாராட்டி, பொதுமக்களின் நன்மதிப்பு அவர்களுக்கும், மூலாதாரக் கொள்கைக்கும் கிடைக்கும்படிச் செய்துவந்தன.

அடக்குமுறை நடத்தும் அரசின் போக்கைக் கண்டித்து மக்கள் மனதிலே அரசுமீது ஆத்திரமும், அருவருப்பும், எதிர்ப்பு உணர்ச்சியும் எழச் செய்தன.

இவைகளுக்கு ஒரே பரிகாரம், காங்கிரசை ஆட்சிப்பீடம் ஏற்றுவதுதான் என்று யோசனை கூறிவந்தன.

தேர்தலின் போது, பொது மக்கள் காங்கிரசை ஆதரித்து, அடக்குமுறை அரசுக்குத் தக்க பாடம் புகட்ட வேண்டும் என்று எழுதி, மக்களைத் தயார்படுத்தி வைத்தன.

இதன் காரணமாக, நேரடி நடவடிக்கைக்காகச் சிறை சென்ற காங்கிரசார் விடுதலை அடைந்ததும், வரவேற்கப்பட்டு, பாராட்டப்பட்டு, பொதுமக்களின் ஆதரவு பெற்று, வளர முடிந்தது.

சுயராஜ்யம் எனும் மூலாதாரக் கொள்கை பற்றிப் பேசும் உரிமை இருந்து வந்ததால், புதிய ஆதரவு பெற்று, தியாகி என்ற சிறப்புப் பெற்று வெளிவந்த காங்கிரசார் சுயராஜ்யக் கொள்கை கூறித் தேர்தலுக்கு நிற்கவும், வெற்றி பெறவும், அரசு ஆளவும் அடக்குமுறைகளை அழிக்கவும் வழி கிடைத்தது.

நம்மிடம், பத்திரிக்கை உலகம் கொண்டுள்ள பரிவு எப்படிப்பட்டது என்பதை நாம் நன்றாக அறிவோம்.

இருட்டடிப்பு, இட்டுக்கட்டுதல், இழிமொழி கூறல், பழி சுமத்துதல், திரித்துக் கூறல், சிண்டு முடிந்து விடுதல் - இவை அவைகளின் முறை.

நாம் சிறைப்பட்டு, கழகம் செயலாற்ற முடியாத நிலை ஏற்பட்டதும், வரவேற்று, திருப்தி தெரிவிக்கத் துடிக்கும்.

பொதுமக்களிடம் செல்வாக்கு ஏற்பட முடியாதவிதமான கருத்துகளைப் பரப்பி, நம்மைப் பற்றித் திரித்துக் கூறும்.

மிகக்குறுகிய காலத்திலேயே, நம்மைப்பற்றியும், நாம் கொண்டுள்ள கொள்கை பற்றியும் பொதுமக்கள் மறந்தேவிடக்கூடிய நிலைமையை இந்த இதழ்கள் ஏற்படுத்திவிடும்.

கொள்கைக்காக கஷ்டநஷ்டம் ஏற்கிறார்கள் என்ற அருமையும், அடக்குமுறை ஆட்சி நடத்தும் காங்கிரசின் கொடுமையையும், பொதுமக்கள் உணர்ந்து, எழுச்சி கொள்ளத்தக்க நிலையை பத்திரிக்கைகள் ஏற்படுத்தினால் மட்டுமே, கஷ்டநஷ்டம் ஏற்றுக் கொண்டதினால் கிடைக்க வேண்டிய பலன், கொள்கைக்குக் கிடைக்கும்.

நாட்டிலுள்ள இதழ்கள் இந்த உதவியை நமக்கு அளிக்கப் போவதில்லை.

நமது கழக ஏடுகள் மட்டுமே இந்த அரும்பணியாற்றமுடியும்.

ஆனால், இதில் உள்ள சங்கடம் என்னவென்றால், நமது இதழ்கள் கழகத்தின் முன்னனியினர் நடத்துவன.

கழகக்கொள்கையான ‘திராவிடநாடு’ திட்டத்தை வலியுறுத்துவன.

திராவிடநாடு திட்டத்தைப் பிரசாரம் செய்து கொண்டு இருக்க, புதிய சட்டம் இடம் தராது.

இதழாசிரியர்கள், கழக முன்னனியினர் ஆதலால், தடைமீறப்படும் நிகழ்ச்சியில் அவர்கள் பங்கு கொள்வர்; சிறைப்படுவர்; ஆகவே, இதழ்கள் இயங்க முடியாத நிலை ஏற்பட்டுவிடும்.

ஆக இருட்டடிப்பும், அதை ஒட்டி நடைபெறும் இடையூறுகளும், நாட்டு மக்கள் மனதைக் கப்பிக்கொள்ளும்.

மீண்டும் ஒருமுறை நிலைமைகளைத் தொகுத்துப் பார்த்துக் கொள்வோம்.

தடை மீறப்படுகிறது.
பலர், சிறைபடுகின்றனர்,
கழகம் இயங்கவில்லை,
தேர்தலில் ஈடுபட வழி இல்லை,
பிற இதழ்கள் இருட்டிப்பு செய்கின்றன.
நமது இதழ்கள் இயங்க முடியாத நிலை,
இதழினர் சிறைப்படுகின்றனர்,
நம்மைப் பற்றிய நினைப்பு பொதுமக்கள் மனதிலிருந்து துடைத்தெடுக்கப்பட்டு விடுகிறது.

இந்த நிலைமை ஏற்பட்டுவிடுவது தவிர்க்க முடியாதது.

இந்த நிலைமை, அடக்குமுறையை எதிர்த்து நின்ற எந்தக் கட்சிக்கும் ஏற்பட்டதில்லை.

கழகத்தை அறை கூவி அழைப்பது போலவும், கழகத்தவரின் வீர உணர்ச்சி, தியாக உள்ளம் ஆகியவற்றுக்குச் சோதனை ஏற்படுத்துவது போலவும், சர்க்கார் ஒரு தடை சட்டம் கொண்டு வருகிறபோது, இப்படி எல்லாம், அக்குவேறு ஆணி வேறாகப் பிரித்துப் பார்த்துக் கூடாது – சீறி எழ வேண்டும், தடை உடைபட வேண்டும் என்று மட்டும் கருதுவது, நாம் கைப்பிடிக்கு அடங்கக்கூடிய மிகச்சிறிய குழுவாக இருந்தாலாவது, பொறுத்துக் கொள்ளத்தக்கதாக இருக்கும்; ஆனால் நாம் மேற்கொள்ளும் போக்கு, மிகப்பெரிய, விரிவாகியுள்ள, காங்கிரசுக்கு அடுத்தபடியாக உள்ள, சில இலட்சம் உறுப்பினர்களையும், பல இலட்சம் மக்களின் நல்லாதரவையும் கொண்ட, பதினைந்து ஆண்டுகள் பல பாடுபட்டு வளர்த்துள்ள, ஒரு பெரிய இயக்கத்தை பாதிக்கக்கூடியது, என்பதை மறந்துவிடக்கூடாது.

நாம் எடுக்கும் முடிவு காரணமாக, எத்தனையோ பேர்களுடைய, வாழ்க்கை நிலையே பாதிக்கப்பட்டுவிடக் கூடும்.

ஆகவேதான், நாம் எடுக்கக்கூடிய முடிவு, பொறுப்பு மிக்கதாக, விளைவுகள் பற்றிய விளக்கம் கண்ட பிறகு எடுக்கக் கூடிய நடைமுறைக்கு ஏற்றதாக, இருக்க வேண்டும்.

முடிவு எடுக்கும் பொறுப்பு ஒரு நூறு பேர்களிடம், கழக அமைப்பு காரணமாக இருக்கிறது.

ஆனால், எடுக்கப்படும் முடிவு, சில இலட்சம் உறுப்பினர்களின் நிலையை பாதிக்கக்கூடியது.

தடை மீறுவது என்ற பொதுவான முடிவு எடுத்துவிடுவது எளிது - பெருத்த ஆதரவு கூறப்படும் - ஆர்வம் காட்டப்படும் - ஐயமில்லை.

ஆனால், எடுக்கப்பட்ட முடிவு, மாற்றார் மதிக்கத்தக்க அளவுள்ள தொகையினரை, அடக்குமுறையை எதிர்த்திடும் துணிவினர் ஆக்கிட வேண்டும்.

நடைமுறைப்படுத்தும் போது, தொகை மிகக்குறைவாகி விடுமானால், இத்தனை கட்டுக்கோப்புள்ள, இத்தனை இலட்சம் உறுப்பினர்கள் உள்ள கழகத்தில் இவ்வளவு குறைவான தொகையினர்தானா, மூலாதாரக் கொள்கைக்குத் தடை வந்த போது எதிர்ப்பு காட்ட முன்வந்தனர், என்ற பேச்சு கிளம்பும் – ஏளனம் – கண்டனம், தொடரும்.

எந்தக் கட்சியும் மேற்கொள்ளும், நேரடி நடவடிக்கை கட்சியில் கணிசமான ஒரு தொகையினர், ஈடுபடத்தக்கதாக இருக்க வேண்டும் - கட்சியின் மதிப்பு காப்பாற்றப்பட வேண்டுமானால்.

பத்தே பேர் கிடைப்பதானாலும் சரி – அது போதும் – மற்றவர்கள் வராவிட்டால் கவலை வேண்டாம் – அவர்கள் போலிகள் – பயங்காளிகள் – சுயநலக்காரர் – என்று கூறுவது, பேச, கேட்க, சுவையாக இருக்கும்.

ஆனால் பத்தேபத்து பேர்தானா! என்று கேட்டு, எதிரிகள் ஏளனம் செய்யும்போது, கிளர்ச்சியில் ஈடுபடாதவர்கள் மட்டுமல்ல, கிளர்ச்சியில் ஈடுபடுபவர்கள் கூட, தலைகுனிய வேண்டிவரும்.

இவ்வளவு பெரிய கழகத்தில் இவ்வளவே பேர்தான், நேரடி நடவடிக்கையில் ஈடுபட முன்வந்தனர்; இருந்தால் என்ன? எண்ணிக்கையைக் கவனிக்க வேண்டாம்! எதற்கும் தாயாராகிவிட்ட எங்களைப் பாரும்!! - என்று கேட்கலாம் – அதனைப் பொருள் உள்ளதாக, ஆட்சியினர் கருத மாட்டார்கள் – உலகு மதிக்காது.

உலகின் போக்கு ஒருபுறம் இருக்கட்டும்; நேரடி நடவடிக்கையில் ஈடுபட்டு, தடைமீறி, சிறைபுக, சிறு தொகையினர் முன்வந்து, மிகப் பலர், அதிலிருந்து ஒதுங்கியிருப்பின் அவர்கள் நிலை என்ன ஆகும்,
கேலிப்பொருளாவர்,
கண்டிக்கப்படுவர்.

ஆனால், கேலியும் கண்டனமும் அவர்கள் மீது பாய்வதால், நமது கொள்கைக்கு உரமோ, கழகத்துக்கு மதிப்போ, ஏற்படுமா? இல்லை!

கேலி, கண்டனம் கேட்டுத் தாங்கிக் கொள்ள முடியாத நிலையில், அவர்கள் கழகத்தைவிட்டு விலகுவர்;
பொதுவாழ்க்கையைவிட்டுப் போய்விடுவர்;

பிற கட்சிகளில் சேர்ந்து கொள்வர்;
நம்மைப் பகைத்துக் கொள்பவர்களாகி விடக்கூடும்.

இந்த நிலை, எந்த விதத்திலும், நமக்குச் சாதகமானது ஆகாது.

மிகத்தெளிவாக நமக்குப் புரிகிறது, தடைமீறிச் சிறைபுகக் கூடியவர்கள், கழக உறுப்பினர்களின் தொகையுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது, மிக மிகச் சிறு தொகையினராக இருப்பர்.

தொகை பற்றி, நான் மிக முக்கியமான பொறுப்பில் இருக்கும் கழகத்தவரிடம் கேட்கும் போது, தயக்கம், திகைப்பு, அச்சம் இவைதான் மேலோங்கித் தெரிகின்றன.

மொத்தம் எவ்வளவு பேர் சிறைப்பட்டால், மதிப்பாக இருக்கும் என்று ஒரு மாவட்டச் செயலாளர் கேட்டார்.

இவர், ஆர்வத்தில் குறைந்தவர் அல்ல.

ஆனால் நான், பிரச்சினையை விளக்கி விளக்கிக் காட்டியதால், நிலைமையை நன்கு உணர்ந்து கொண்டவர்.

நான் சொல்லுவானேன்? வந்திருக்கும் தடை, நமது மூலாதாரக் கொள்கைக்கு. நாமோ 15 ஆண்டுகள் வளர்ந்துள்ள கழகம். உறுப்பினர்களோ சில இலட்சம். வாக்கு கொடுத்தவர்களோ 34 இலட்சம். M. L. A. க்கள் 50. M. P. க்கள் 8. இதைக் கவனத்தில் கொண்டு இப்படிப்பட்ட ஒரு கழகம், இப்படிப்பட்ட நிலைமையில், மதிப்பு பெற வேண்டுமானால் எத்தனை ஆயிரம் பேர் வேண்டும் என்று நீயே கணக்குப்பார்த்துச் சொல்லேன் என்று நான் கேட்டேன்.

சிரமப்பட்டு யோசித்து அவர் சொன்னது,
ஜில்லாவுக்கு நூறு பேராவது கிடைத்தால்தானே நன்றாக இருக்கும்
என்பதாகும்.

இது மிகக்குறைவான கணக்கு என்று வாதாட சிலர் முன்வரக்கூடும். நான் இதன் தொடர்பாக, மற்றொன்றும் கூற விரும்புகிறேன்.

கழக உறுப்பினர்கள், கொள்கைப் பிடித்தம் கொண்டவர்கள் ஆனால் கழக அமைப்பிலும், சமூக அமைப்பிலும் குறிப்பிடத்தக்கவர்கள் என்ற வரிசையில் இல்லாதவர்கள், பலப்பல ஆயிரம், சிறை செல்ல, வழி செய்து, கழகம் பெருமை தேடிக்கொள்வதிலே பொருள் இல்லை. எனக்கு அதில் விருப்பமும் இல்லை.

காரணம், முதலாவதாக, அத்தகையவர்கள், ஆர்வ மிகுதியால், விளைவு பற்றி இப்போது எண்ணிப் பார்க்காமல் சிறை புகுந்துவிடுகிறார்கள், பிறகோ வெளியே சென்றுவிட வழி தேடுகிறார்கள். அவர்களின் வாழ்க்கை முறையும், குடும்ப நிலையும், அவர்களை அந்தப்படி நடந்துவிடச் செய்கிறது.

அதிகம் பேர், சிறை செல்லவில்லை என்பதால் ஏற்படும் இழிவைக் காட்டிலும், சிறை சென்றவர்களில் பலர், மன்னிப்பு கேட்டு வெளிவந்துவிட்டனர் என்ற நிலை, கொடுமை நிறைந்த இழிவாக நான் கருதுகிறேன்.

காரணம் ஆயிரம் காட்டினாலும், ஜூலை கிளர்ச்சியின்போது, ஏற்பட்ட வெளிவரும் படலம், என் நம்பிக்கையை நாசமாக்கிவிட்டது; அந்தக் கசப்பான அனுபவம் என் மனதை விட்டு அகல மறுக்கிறது.

இரண்டாவதாக, குறிப்பிடத்தக்கவர்கள் குறைவான எண்ணிக்கையில் சிறை செல்வதால், கிடைக்கும் ஆதரவு, குறிப்பிடத்தக்கவர்களல்லாத நிலையில் உள்ள, தொண்டர்கள் பெரும் அளவிலே செல்வதால் ஏற்பட்டுவிடாது.

பெரிய தொகையினர் சிறை சென்றனர் என்ற கணக்கு, கட்சியின் வளர்ச்சி எவ்வளவு பெரிது என்பதைத்தான் காட்டும்; வேறு பலன் இல்லை.

ஆனால் குறிப்பிடத்தக்கவர்கள் சிறைப்படுவதன் மூலமாகத்தான், பொதுமக்கள் மனதிலே மரியாதை உணர்ச்சியை ஏற்படுத்த முடியும்.

ஆகவே, ஜில்லாவுக்கு நூறு என்ற கணக்கு, மிகக்குறைவு என்பதல்ல எனக்கு உள்ள கவலை. அந்தத் தொகையாவது கிடைக்குமா என்பதும்,
அவர்கள் குறிப்பிடத்தக்கவர்களாக இருப்பார்களா, என்ற கவலையும்தான்.

தொகையும் ஜில்லாவுக்கு 100 என்று இருந்து, ஆட்களும் வெறும் தொண்டர்கள்தான் என்றும் இருந்துவிட்டால், மதிப்பும் இல்லை, மகிழ்ச்சியும் இல்லை, பொருளும் இல்லை, பயனும் இல்லை.

குறிப்பிடத்தக்கவர்களில் சிலரிடம் பேசிப்பார்த்ததில், எனக்குத் தெம்பும் நம்பிக்கையும் பிறக்கவில்லை.

மிகக்குறைவான பகுதியினரே, குறிப்பிடத்தக்கவர்களில், கிடைப்பார்கள் என்று தெரிகிறது.

அப்படிப்பட்டவர்களைத் தூக்கி எறிந்துவிட வேண்டியதுதான்! அம்பலப்படுத்திவிட வேண்டியதுதான்! அப்புறப்படுத்திவிட வேண்டியதுதான்! என்று பேசுவோர் உளர்.

எனக்கு அந்தப் பேச்சு பிடிக்காது என்பதுடன், அப்படிப் பேசுவர்களை மட்டும் துணை கொண்டு, ஒரு கழகத்தை நடத்திச் செல்ல முடியாது என்றும் எண்ணம் கொண்டுள்ளேன்.

இதைச் சாதகமான சந்தர்ப்பம் ஆக்கி, கட்சியிலே இருந்து பலர் மீது கரி பூசி வெளி அனுப்பும் போக்கு எனக்குப் பிடிக்காதது, மட்டுமல்ல, அது நீண்ட காலப் பலன் தரக்கூடியதுமல்ல.

இந்தப் போக்கிலே நாம் நடந்து கொள்ளப்போவது தெரிந்ததுமே, பலர், தாமாகவே கழகத்தை விட்டு வெளியேறிவிடுவர், அவர்களில் சிலரையாவது எதிர்கட்சிகள் பயன்படுத்திக் கொண்டு, நம் மீது பழி சுமத்தும் - மொத்தத்தில் கழகத்துக்கு அதனால் இழுக்குதான் ஏற்படும்.

அந்த முறையையும் நான் விரும்பவில்லை.

சோதனை ஏற்படும்போது சிறை செல்ல வேண்டும், அந்த வீர உணர்ச்சியும், தியாக உள்ளமும் வேண்டும், அந்த இயல்பு போற்றப்பட வேண்டும் என்பதை நான் ஏற்றுக் கொள்பவன், ஆனால், அத்தகையவர்கள் மட்டும்தான் ஒரு கட்சியில் இருக்க வேண்டும்,

அதற்கு தயாராக இல்லாதவர்களால் கட்சிக்குப் பலனே ஏற்படாது என்று நான் கருதுபவன் அல்ல.

கழகம், ஒவ்வொரு விதமான நிலையினர், இயல்பினர் அவரவர்க்கு இயன்ற அளவிலும் வகையிலும் துணைபுரிவதால், தொண்டாற்றுவதால், வளருவது; சிறைபுகும் ஆற்றலை மட்டும் காட்டுவோர் கொண்டதாக இருந்திட வேண்டும் என்பது, பொதுவிதியும் அல்ல, விரிவான ஒரு இயக்கம் நடத்தும் முறையும் அது அல்ல.

சிறைபுக இயலாத நிலையினர் மீது பாய்ந்திடுவது, இருபக்கம் கூருள்ள கத்தியுடன் விளையாடுவதாக முடியும்.

அதிலே சிலர், நமது கொள்கையே சரியில்லை, அல்லது பிடிக்கவில்லை என்று காரணம் காட்டி, விலகக்கூடும்.

அப்படிப்பட்டவர்களைத் தூக்கி வைத்துக் கொண்டு மாற்றுக் கட்சியினர், கொண்டாடி, பொதுமக்கள் மனதைக் குழப்பிடக் கூடும்.

இவைகளெல்லாம், விரும்பத்தகாத நிலைமைகள்; தவிர்க்கப்பட வேண்டியவைகள்.

இயலாமை காரணமாக, சிறை வராதிருப்போரைப் பழிப்பதும், பகைவர்களாக்கிக் கொள்வதும், நல்லது அல்ல.

மிகச்சிறிய தொகையினர் சிறைபுக வருவர்.

மிகப்பெரிய தொகையினர் சிறைபுக வரமாட்டார்கள்.

இது எந்த அமைப்புக்கும் உள்ளது; அதிலும் நமது கழகத்தில், இது தவிர்க்க முடியாததாகிவிட்டிருக்கிறது.

இந்த நிலைமையை, நாமும் எடுத்துக்காட்டி, நையாண்டிக்கு இடம் ஏற்படுத்திக் கொள்வது அறிவுடைமை ஆகாது.

இதனை, உள்ள நிலைமை என்றுகூட நான் வெளியில் கூற விரும்பவில்லை, மாறாக இது நாங்கள் ஏற்படுத்திக் கொண்ட நிலைமை, வகுத்துக் கொண்ட முறை என்றுதான் கூறுவேன்.

ஏனெனில், அப்போதுதான், கழகத்தின் மீது இழிவு படராமல் இருக்கும்.

மிகப் பெரும்பாலோர் சிறைபுக மறுத்து விட்டனர் - இவ்வளவுதான் இந்தக் கழகத்தின் இலட்சணம் என்ற பேச்சு, அடக்குமுறையைவிட வேகமாக, கழகத்தை அழித்துவிடும்.

ஆகவே, சிறைபுகத் துணிவு கொள்வோர், என் பாராட்டுதலைப்பெறுவர், ஐயமில்லை, ஆனால் அவர்கள், சிறை புகாதவர்களைப் பழிக்கவும், பழிதீர்த்து கொள்ளவும் முனைவதை நான் விரும்ப மாட்டேன்.

சிறைபுக முன்வருவோர், சிறைபுகுவது மட்டுமல்ல, சிறைபுகாதவர்களின் மீது பகை காட்டாமல் இருப்பதையும், தமக்குரிய பண்பு ஆக்கிக் கொள்ள வேண்டும்.

திராவிட முன்னேற்றக் கழகம் - சிறை புகும் துணிவுடையோர் மட்டும் கொண்ட அமைப்பு அல்ல. பல்வேறு இயல்புடையார், திறனுடையார், கொண்ட அமைப்பு.

ஆக எனக்கு உள்ள கவலை,
மிக்குறைவான தொகையினர் மட்டுமே சிறை புகுவார்களே
என்பது மட்டுமல்ல,
அவர்கள், சிறைபுகாதவர்களை அம்பலப்படுத்தி, பகை எழுப்பி, அதன் காரணமாக, கழகத்துக்கு மேலும் சரிவு ஏற்படுத்த முனைவார்களோ என்கிற அச்சமும் உண்டு. பிறர் கேட்கும் முன்பு நானே கூறிவிடுகிறேன்,
நான் சிறைபுகும் வரிசையில் இருக்கிறேன்.
வெளியில் இருக்கும் வரிசையினன் அல்ல.
ஆனால் வெளியே இருந்திட வேண்டிய நிலையில் உள்ள கழகத் தோழர்களை, வெறுத்திட, குறைவாகப் பேசிட, அம்பலப்படுத்திட, பகை மூட்டிட, விரட்டிவிட, நான் விரும்புபவன் அல்ல.
பலகாலமாக கூறி வந்ததை மீண்டும் கூறிகிறேன்,
நான் பத்து, பதினொன்று ஆவதை விரும்புபவன்,
பத்து, எட்டு ஆக்கப்படுவதை விரும்புபவன் அல்ல.
இது என்னுடைய சொந்த விருப்பு வெறுப்புப் பிரச்சினை அல்ல.
கழகம் வளர, இது முறை என்று நான் நம்புகிறேன். கழகத்தை நடத்திச் செல்லும் பொறுப்பு என்னிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள வரையில், இந்த முறை இருக்கும். இதனைத் தெளிவுப்படுத்திக் கொள்ள வேண்டும்; ஏனெனில்
சிறைபுகும் உயர்ஜாதி
சிறை புகாத மட்ட ஜாதி
என்ற நிலை, கழகத்தில் ஏற்பட்டுவிட இடமளிக்கக் கூடாது.
1963 ல், வாழ்க்கை நிலை, தொழில் நிலை, குடும்ப நிலை, மனநிலை காரணமாக, சிறைபுக இயலாது இருக்கும் ஒரு கழகத் தோழர், 1965 ல் சிறைபுகும் நிலை பெறக்கூடும். இதற்கு நேர்மாறாக, 1963 ல் சிறைக்கு அஞ்சாது இருக்கும் ஒருவர், 1965 ல் சிறை செல்ல முடியாத நிலையினராகிவிடக்கூடும்.
எனவேதான், ஒரு குறிப்பிட்ட கட்டத்தின்போது சிறை செல்ல இயலாதவராக, ஒருவர் இருப்பதை, நிரந்தரமான பலகீனமென்றோ, மாறவே முடியாத இயல்பு என்றோ எண்ணிக் கொண்டு அவரால் கிடைக்கக் கூடிய வேறுபல துணைகளை, பயன்களை, இழந்திடும் முறையில், அவரை, விரட்டுவது, யூகம் ஆகாது; நியாயமும் அல்ல என்பது என் கருத்து.

சிறைபுக இசைவோரின் தன்மையும் தொகையும் ஒருபுறமிருக்க, இவர்கள், தடை மீறிச் சிறை புகுவது, தி. மு. கழகத்தவர் என்ற முத்திரையுடன்தான் இருக்குமா என்பது கவனிக்கப்பட வேண்டிய பிரச்சினையாகும்.

தி. மு. கழகம், தடைச்சட்டத்தை மீறுவது என்று நாம் முடிவெடுத்து, அந்த முடிவின் அடிப்படையில், ஒரு குறிப்பிட்ட அளவினர், தடை மீறுவர், மற்றவர், கழகத்தை நடத்திச் செல்வர், என்ற நிலை இருக்க, சட்டம் இடமளிக்கவில்லை.

தி. மு. கழகம், தடைச்சட்டத்தை மீறும் என்று நாம் முடிவு எடுத்துவிட்டால், மீறுவோர், மீறாதவர் என்ற பாகுபாடு பற்றி, சர்க்கார் கணக்கெடுத்து, மீறுவோரை மட்டும் சிறைப்படுத்தி, மீறாதவர்களை கழகம் நடத்த விட்டுவைக்கும் என்று எண்ணி ஏமாறக்கூடாது. கழகம் என்ற அமைப்பே அழிக்கப்பட்டுவிடும். கழகத்தவர் என்ற நிலையே எவருக்கும் இருந்திடாது.

கழகமும் அழிந்து, கழகத்தவரில் மிகமிகச் சிலர் மட்டுமே சிறைப்பட்டனர் என்ற நிலை ஏற்படும்.

இந்த நிலை எந்தவிதத்திலும் பயன் தருவது ஆகாது.

ஆக நாம் மீண்டும் அடிப்படைக்கு வருகிறோம் - தடை மீறுவோரின் அளவு இருக்கட்டும் - கழகம் என்ற அமைப்பு, தடை மீறும் செயலுக்குப் பிறகும் இருக்க வேண்டுமா, வேண்டாமா என்ற பிரச்சினைக்கு வருகிறோம்.

வேண்டாம் என்று நாம் கருதினால், பிறகு, நாம் மீண்டும் சந்திக்க வேண்டிய அவசியம் கூட இல்லை. முன்பு நான் கூறியபடி, அது தற்கொலைத்திட்டம் ஆகிவிடுகிறது.

சிலர் அது போலாகி, கழகமும் கலைந்த பிறகு, மீதம் உள்ளவர்கள் கூடி, புதிதாக ஒரு அமைப்பு ஏற்படுத்திக் கொண்டு இயங்கட்டுமே என்று கூறத் தோன்றும்.

அப்படி இயங்க முன்வரும் அமைப்பு, திராவிடநாடு கேட்பதாக இராது என்பதை மறந்துவிட வேண்டாம்.

நாமெல்லாம் பதினைந்து ஆண்டுகள் பாடுபட்டு எந்த வடிவத்தைக் கழகம் பெறச் செய்திருக்கிறோமோ அந்த வடிவம், புதிய அமைப்பு, நம்முடைய பணியும் இல்லாத நிலையில், பெற, எவ்வளவு காலம் பிடிக்கும் என்பதனையும் நாம் மறந்துவிடக்கூடாது.

இவை இரண்டையும் எண்ணிப் பார்க்கும்போது; நமக்கு மகிழ்ச்சியோ, நமபிக்கையோ பிறக்க வழி இல்லை.

தடைச்சட்டத்தால் கழகம் கலைந்துவிட வேண்டும் என்று காங்கிரஸ் மட்டுமல்ல, காங்கிரசின் எதிர்க் கட்சிகளும் விரும்புகின்றன. – எதிர்பார்த்துக் கொண்டுள்ளன.

தடைச்சட்டம் மீறப்படுவதால், கழகம் நடாத்துவோர் சிறையில் தள்ளப்பட்டு கழகமும் கலைக்கப்பட்டுப் போனால் கடும் நடவடிக்கைக்குத் தம்மை ஈடுபடுத்திக் கொள்ள இயலாத நிலையினரும், கழக ஆதரவாளரும், தமக்குரிய இடம் இழந்து, அலைவார்கள், அப்போது அவர்களை இழுத்துப் போட்டுக் கொண்டு, புதிய வலிவு பெறலாம் என்று எண்ணிப் பல கட்சிகள் பல் விளக்கிக் கொண்டுள்ளன.

நமக்கு ரோஷம் ஊட்டிச் சிலர் பேசுவதும், இங்கு, தலைமையினர் தயக்கம் காட்டுகிறார்கள், தொண்டர்கள் துடிக்கிறார்கள், என்று கதைக்கட்டிப் பேசுவோரும், இந்த அற்ப ஆசையால் உந்தப்பட்டவர்கள்.

பதினைந்து ஆண்டுகளாக, நாம் ஊட்டி வைத்திருக்கின்ற, காங்கிரஸ் எதிர்ப்பு உணர்ச்சி, நாம் சிறை சென்று, கழகம் கலைக்கப்பட்டுப் போன பிறகும், நாட்டிலே உலவியபடி இருக்கும். அந்த உணர்ச்சியைத் தமக்குச் சாதமாகத் திருப்பிப் பலன்பெற வேண்டுமென்று அந்த கட்சிகள், தவம் கிடக்கின்றன.

யோசிக்காமல், தீரமாக நின்று, தடையை மீற வேண்டும் என்று நமக்கு அவர்கள் ‘கட்டளை’ பிறப்பித்துக் கொண்டிருப்பதுகூட, நாம் இருக்கும் வரையில், நமது கழகம் இயங்கும் வரையில், தாங்கள் வளர முடியாது என்பதால்தான்.

வீட்டுக்கு உரியவர் வெளியூர் சென்று விட்டால், பூட்டை உடைத்துப் பொருளைக் கொள்ளையிடலாம் என்று எண்ணும் கள்ளர் போலவும், கிழவன் சீக்கிரம் கண்ணை மூடிக்கொண்டால் சேர்த்து வைத்துள்ள சொத்தைப் பெற்று சுகவாழ்வு நடத்தலாம் என்று எண்ணும் ‘மைனர்’ போலவும், இந்த அரசியல் கட்சிகள், கழகம் கலையட்டும், கழகம் நடத்துவோர் சிறைப்படட்டும் என்று கார்த்துக் கொண்டு உள்ளனர்.

இவர்கள், நாம் கொண்டுள்ள கொள்கையை அல்ல, நாம் சேகரித்து வைத்துள்ள, ‘காங்கிரஸ் எதிர்ப்புணர்ச்சி’ எனும் சொத்தைக் கொள்ளையிட்டுக் கொழுத்திட முனைபவர்கள்.

நாம், அவசரப்பட்டு முடிவெடுத்து, இவர்களின் சூதுக்கு இரை தேடிக் கொடுப்பது, கிளியை வளர்த்துப் பூனையிடம் கொடுப்பதாகும். இது தவறு மட்டுமல்ல; பைத்யக்காரத்தனம்; மக்களுக்கு நம்மையும் அறியாமல், நாம் இழைக்கும் துரோகமாகவும் முடியும்.

இது மிகமிகக் கூர்ந்துபார்க்கப்பட வேண்டிய பிரச்சினை.

எப்படியோ ஆகிவிட்டுப் போகட்டும், யாரோ பலன் பெற்றுக் கொண்டு போகட்டும் என்று நாம் விட்டுவிடுவது, பொறுப்பற்ற செயலாகும்.

நாம் சிறை சென்று, நமது கழகம் கலைந்து, நாம் சேர்த்து வைத்துள்ள ‘உணர்ச்சி’, நம்மை உள்ளூற வெறுத்துக் கிடக்கும், இடர்தேடிகட்குப் போய்ச் சேர வழி அமைத்துக் கொடுப்பது, நியாயமுமல்ல, தேவையுமல்ல.

தி. மு. கழகம், தடைச்சட்டம் காரணமாக, அழிக்கப்பட்டு போனால், அதன் அளவுக்குக் காங்கிரஸ் எதேச்சாதிகாரத்தை எதிர்த்து நிற்கும் வேறு ஒரு கட்சி இன்று இல்லை, இன்னும் இருபது ஆண்டுகளுக்கு ஏற்பட முடியாது.

அவ்விதம் வேறோர் கட்சி வடிவமெடுத்தாலும், அதன் கொள்கை, தி. மு. கழகத்திடம் பரிவு காட்டுவதாக இருக்காது.

ஒரு முக்கியமான விஷயத்தை நாம் மறந்துவிடக் கூடாது, நமது கழகத்திடம் காங்கிரசுக்கு எவ்வளவு வெறுப்பு இருக்கிறதோ, அதே அளவுக்கும் அதைவிட அதிகமாகவும், பிறகட்சிகளுக்கு உள்ளன.

எனவே, தி. மு. கழகம் மறைகிறது என்றால், ஆளுங்கட்சியும், மற்ற எதிர்கட்சிகளும் மட்டற்ற மகிழ்ச்சி கொள்ளும்.

மற்றக் கட்சிகள்கூட, காங்கிரஸ் போலவே, அகில இந்தியா என்ற திட்டத்தை ஏற்றுக் கொள்பவை.

தி. மு. கழகம், பிரிவினை கேட்பதால், நாட்டினில் ஏற்பட்டுள்ள விழிப்பையும், எழுச்சியையும் பார்த்து, மக்களை ஓரளவுக்காகிலும் திருப்திப்படுத்த வேண்டும் என்ற எண்ணம் கொண்டு அந்த கட்சிகள், தென்னாட்டுக்கு பொருளாதார வளர்ச்சி வேண்டும், உரிய பங்கு வேண்டும் என்று பேசுகின்றன. தி.மு. கழகம் இல்லை என்ற நிலை ஏற்பட்டு விட்டால், அந்தப் பேச்சையும் அந்தக் கட்சிகள் விட்டுவிடும். தென்னாட்டின் உரிமைகளுக்காக வாதிட ஒரு கட்சியும் முன் வராது.

தி. மு. கழகம் மறைந்து அப்படிப்பட்ட கட்சிகள் வலிவும் செல்வாக்கும் பெறுவதால்

தென்னாட்டுக்கும் இலாபம் இல்லை,
ஜனநாயகத்துக்கும் வளர்ச்சி இல்லை.

திராவிட முன்னேற்றக் கழகம் இன்று, பாராளுமன்றத் துறையில் குறிப்பிடத்தக்க நிலையை பெற்றுவிட்டதால், அது பலருக்கு மிகச் சாதாரணமானதாகத் தோன்றுகிறது - எத்துனை பாடுபட்ட பிறகு, அந்த நிலை கிடைத்தது என்பதைக் கவனித்தால் மட்டுமே அந்த நிலையின் மேம்பாடு புரியும்.

சென்ற தேர்தலில், ஆளுங்கட்சிக்கு கிடைத்த மொத்த வாக்குகள் 50 இலட்சம்; தி. மு. கழகத்துக்கு 34 இலட்சம்.

இந்த அளவு, ஆளுங்கட்சியுடன் நெருங்கி வந்துள்ள எதிர்க்கட்சி, இந்தியாவிலேயே வேறு எங்கும் இல்லை, என்பது சர்வசாதாரணமான விஷயம் அல்ல. பெற்றுவிட்ட பிறகு இது சிலருக்கு அல்பமானதாகக்கூடத் தெரியும்.

காங்கிரஸ் பெற்றது 50 இலட்சம் வாக்குகள் என்றால், அவை 200 தொகுதிகளிலும் தேர்தலில் ஈடுபட்டு. தி. மு. கழகம் பெற்ற 34 இலட்சம் வாக்குகளும் 140 தொகுதிகளில் மட்டும் ஈடுபட்டுப் பெறப்பட்டவை.

இந்த கணக்கு காட்டும் பாடத்தை, பெற்றுவிட்ட நாம் மிகச்சாதாரணமானது என்று எண்ணிக் கொள்கிறோம். ஆனால் அரசியல் வட்டாரம், இதனை மிகப் பெரிய சம்பவமாக்க் கருதுகின்றனர்.

இந்த அளவு; அடுத்த தேர்தலில், வாக்குகள் பெறத்தக்க நிலையில், வேறு எந்த கட்சியும் வளர்ந்து இல்லை.

தி. மு. கழகம், தடைச்சட்டம் காரணமாக, கலைகிறது என்றால், சிறை சென்றவர் போக மீதமுள்ளவர்கள் மட்டுமல்ல, ஆதரவு காட்டி வாக்களித்த பல இலட்சக்கடக்கானவர்கள், எவர் பக்கம் தமது ஆதரவினைத் திருப்புவர்; அவர்களின் நடவடிக்கை எவ்விதம் இருக்கும் என்பதைக் கவனிக்க வேண்டும்.

அவர்களில் மிகப் பெரும்பாலோர், சிறைப்பட்டுள்ள தி. மு. கழகத்தவரிடம், உண்மையாகவோ, போலியாகவோ, பரிவு காட்டிப் பேசுகிற கட்சிக்குத் தமது வாக்குகளைத்

தருவர். அந்த வாய்ப்பு, இன்று, சுதந்திரக் கட்சிக்கு இருக்கிறது. அந்தக் கட்சிதான் நமது கொள்கையை ஏற்க மறுத்த போதிலும்; பரிவு பேசியும் மரியாதை காட்டியும் வருகிறது. நம்மை ஆதரித்து வந்த வாக்காளர்கள், நாம் இல்லாத நிலையில், தமது ஆதரவை சுதந்திர கட்சிக்குத் தருவார்கள்.

கம்யூனிஸ்டு கட்சி சீனப் பிரச்சினை காரணமாக, அடுத்த தேர்தலில், மக்கள் ஆதரவைப் பெற இயலாத நிலையைத் தேடிக் கொண்டுவிட்டது. கம்யூனிஸ்டு கட்சியும் இதர கட்சிகளும், தி. மு. கழகத்தையும் அதன் தலைவர்களையும், தரக்குறைவாகப் பேசி, நமது ஆதரவாளர்களின் கசப்புக்கும், வெறுப்புக்கும் ஆளாகிவிட்டன. எனவே, அடுத்த தேர்தலில் நாம் இல்லை என்றால், வாய்ப்பு சுதந்திர கட்சிக்கு என்று ஏற்படுகிறது. இது எந்த விதத்திலும், பாட்டாளி, நடுத்தர வகுப்பினருக்கு நலன் தருவதாகாது. இதுவும் ஒரு அகில இந்திய கட்சி ஆதலால், தென்னாட்டு உரிமைக்கு இதனாலும் ஒரு பயனும் ஏற்படாது. ராஜகோபாலாச்சாரியாருக்குப் பிறகு, சுதந்திரக் கட்சியின் தலைமையும் வடநாட்டுக்குத்தான் போய்ச் சேரும். எனவே அந்தக் கட்சியின் வளர்ச்சி, நமது மக்களுக்கு எந்தவிதமான பலனையும் தந்துவிடாது.

தி. மு. கழகம் மறைய நேரிட்டால், நம்மையும் அறியாமல், என்னென்ன அரசியல் விபத்துகள் ஏற்படக் கூடும் என்பதைச் சுட்டிக்காட்ட, இதனைக் கூறுகிறேன்.

தடைச்சட்டத்தை மீறிவிடுவதால், தி. மு. கழகம் எனும் அமைப்பு அழிக்கப்பட்டுவிடுகிறது என்பதால், ஏற்படக்கூடிய நிலை இது.

இதற்காக, தடைச்சட்டத்தை மீறாமல், அதற்கு உட்பட்ட முறையில் கொள்கையைக் குறைத்துக் கொண்டால், என்ன நேரிடக் கூடும் என்பதையும் கவனித்துப் பார்க்க வேண்டும்.

கொள்கை போன பிறகு, மற்ற எதைப்பற்றி என்ன கவலை என்பது, கொள்கைப்பற்று காரணமாக ஏற்படும், தூய்மையான எண்ணம்.

அந்த எண்ணத்திலே துளியும் தவறில்லை. ஆனால், தவறு எதிலே இருக்கிறது என்றால், தடையை மீறி விடுவதால் மட்டும் கொள்கை காப்பாற்றப்பட்டுவிடும், வளர்ந்து விடும் என்று எண்ணிக் கொள்வதிலேதான் இருக்கிறது.

தடையை மீறுவதால், கொள்கை வளர வழி கிடைக்கப் போவதில்லை, மீறுகிறவர்களின் பேரும் புகழும் நிச்சயம் வளரும் - மீறுகின்றவர்களின் இதயத்தில் ஒரு பெருமிதம் எழும் - வரலாற்றில் பொறிக்கப்படத்தக்க வீரச்செயலில் ஈடுபட்டோம் என்ற திருப்தி ஏற்படும்.

கொள்கை வளராது; வழி கிடைக்காது என்று ஏன் கூறுகிறேன்?

கொள்கை வளர்ச்சி என்பது, தொடர்ந்து நடத்தப்படும் பிரசாரத்தினால் மட்டுமே ஏற்படும்.

அந்தப் பிரசாரமும் ஒரு அமைப்பின் மூலம் செய்யப்பட வேண்டும்.

அந்த அமைப்பும், வளர்ந்தபடி இருக்க வேண்டும்.

அந்த அமைப்புக்கு மக்களின் ஆதரவு பெருகியபடி இருக்க வேண்டும்.

மக்களின் ஆதரவு பெருகியபடி இருக்கிறதா என்ற கணக்குப் பார்க்க தேர்தல் ஒரு வகையான கருவி.

எனவே கொள்கை பிரசாரம் – அமைப்பு – மக்கள் ஆதரவு வளர்ச்சி எனபவைகளைப் பொறுத்தே வெற்றிக்கான வளர்ச்சியும் வலிவும் பெற முடியும்.

தடைச்சட்டத்தின்படி, ஏற்படும் நிலைமையில், கொள்கையை, தடைமீறி பேசுவது என்பது, வீரச்செயல், தியாகத்துக்கான வாய்ப்பு என்று ஆகுமே தவிர, கொள்கை வளர்ச்சி ஆகி விடாது.

எனவே, தடை மீறுவதன் மூலம் கொள்கை தானாக வளரும் என்று எண்ணுவது தவறு.

ஆனால் கொள்கையைக் குறைத்துக் கொண்டால், கழகம் மதிப்பு இழந்து, மங்கி, பிறருடைய ஏச்சுக்கும், பேச்சுக்கும் ஆளாகி, கேலிப் பொருளாகி குன்றிப் போய்விடாதா, என்ற கவலையும் கலக்கமும், கழகத்திடம் நிரம்பப் பற்று கொண்டவர்களுக்கு ஏற்படத்தான் செய்யும்.

ஒருவிதமான சரிவும் ஏற்படாது என்று கூறவும் நான் தயாராக இல்லை.

சரிவு ஏற்பட்டால் என்ன என்று வாதிடவும் போவதில்லை.

சரிவு ஏற்படத்தான் செய்யும் – எதிரிகள் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு, கழகத்தைத் தாக்கத்தான் செய்வர். அத்தாக்குதலை அலட்சியப்படுத்தவும் கூடாது.

ஆனால், கழகத்தைத் தாக்கிப் பேசிவிட்டு, கொள்கையை விட்டுவிட்டார்கள் என்று குற்றம் கூறிவிட்டு, அவர்களில் எவரும், தீவிரமாகவோ, தீரமாகவோ, அந்தக் கொள்கையை மேற்கொண்டுவிடப் போவதில்லை.

எனவே அவர்களின் தூற்றல், அவர்களுக்கும் பலனைத் தராது, கொள்கையைக் கழகம் விட்டுவிட்டதே என்ற கவலை கொண்டவர்களுக்கும் பலன் கிடைக்காது.

அந்தத் தூற்றல், கழகத்தை எப்போதும், தூற்றிக் கொண்டு வருகிற முறையிலே ஒரு பகுதி என்ற நிலையை த்தான் அடையும்.

ஆனால் அதைக்கூறி எனக்கு நானே சமாதானம் தேடிக்கொள்ளப் போவதுமில்லை, உங்களுக்கும் அதனைச் சமாதானமாகக் கூறவில்லை.

தூற்றக்கூடியவர்களின் தரம் அப்படிப்பட்டது என்பதைக் காட்ட மட்டுமே அதைச் சொன்னேன்.

எனக்கு உள்ள கவலை, தூற்றுபவர்களைப் பற்றி அல்ல - அவர்களின் துரிதத் தன்மையையும் தீவிரத் தன்மையையும் நான் மிக நன்றாக அறிவேன்.

பாகிஸ்தான் தர வேண்டும் என்றால், சுயராஜ்யமே வேண்டாம் என்ற உறுதி கடைசியில் என்ன ஆயிற்று என்பது நமக்குத் தெரியும்.

என் பிணத்தின் மீது நின்று கொண்டுதான் பாகிஸ்தான் பிரிக்கப்பட முடியும் என்று பேசியவர்களையும் நான் அறிவேன்.

என்னென்ன நிலையில் எந்தெந்த அரசியல் கட்சிகள், தலைவர்கள், கொள்கைகளைக் குறைத்துக் கொண்டனர் என்பதும் எனக்குத் தெரியும்.

பெரியாரின் பொது உடைமைப் பிரசாரம் என்ன ஆயிற்று என்பதும், அக்ரகாரத்தைக் கொளுத்த தீவட்டியைத் தயாராக பெட்ரோல், டின்னுடன் வைத்துக் கொண்டிருக்கச் சொன்னது என்ன ஆயிற்று என்பதும், எனக்கும் தெரியும் - உங்களுக்கும் தெரியும்.

எனவேதான், தி. மு. கழகம் கொள்கையை மாற்றிக் கொண்டது என்று தூற்றக் கூடியவர்களைப்பற்றி நான் கவலைப்படவில்லை என்று சொன்னேன். எனக்கு உள்ள கவலை, அவர்கள் என்ன ஏசுவார்கள் என்பது அல்ல, என் மனம் என்ன பாடுபடும், என்பதுதான். கொள்கையிலே எனக்கு அவநம்பிக்கை ஏற்பட்டு, வெறுப்பு ஏற்பட்டு, மாற்றிக் கொள்வதானால், மனம் பாடுபடாது.

பார்ப்பனீயம் என்று நாம் பேசினோம் - நாம் பார்ப்பனருக்கு அடிமையாகி விட்டோம் என்று பெரியார், பலத்த பிரசாரம் செய்தார் – மிகக் கேவலமான முறையிலே பேசினார் – நாம் பயந்துவிடவுமில்லை – நமது வளர்ச்சி பாதிக்கப்படவுமில்லை. நாம் பார்ப்பனருக்கு அடிமையாகிவிடவும் இல்லை - பார்ப்பனருக்குக் கடைசியில் ஓட்டு சேகரிக்க ஊரூராக சென்றவர் பெரியாரே தவிர நாம் அல்ல.

பிள்ளையாரை உடைக்கப்போவதில்லை என்று கூறினோம் - உடனே பெரியார், பார்! பார்! இவர்கள் சுயமாரியாதையை விட்டுவிட்டார்கள், வைதீகர்கள் ஆகிவிட்டார்கள் என்று ஏசினார் - நாம் அஞ்சிவிடவுமில்லை, நமது வளர்ச்சி குன்றிவிடவுமில்லை.

சட்டசபைக்குச் சென்றாலே, காங்கிரசின் காலடியில் வீழ்வார்கள் என்றார் பெரியார், நாம் அப்படி விழுந்துவிடவுமில்லை, சட்டசபையை விட்டு விடவுமில்லை.

தூற்றி நம்மை தொலைத்து விட்டிருக்க முடியுமானால், பெரியாரின் பிரசாரத்தின் காரணமாக, நாம் புதைக்கப்பட்ட இடத்திலே புல் முளைத்து விட்டிருக்க வேண்டும்.

தூற்றலுக்காக நான் துளியும் அஞ்சவில்லை - அஞ்சப்போவதுமில்லை. நாம் அழுத்தமாக நம்பிக்கொண்டிருக்கும் நாட்டுப் பிரிவினைக் கொள்கையை விட்டுவிட, நமது மனம் எப்படி இடம் கொடுக்கும். மாற்றிக் கொண்டால், மனம் எப்படி நிம்மதி பெற முடியும் என்பதுதான்.

எனவேதான் நாம் நம்பும் கொள்கையை விட்டுவிடவும் கூடாது, அதேபோது, நாம் கட்டி வளர்த்துள்ள கழகம் என்ற அமைப்பையும் அழிந்து போகவிடக் கூடாது என்று எண்ணுகிறேன்.

இரண்டிலும் நான் தொடர்பு கொண்டவன் என்பது மட்டுமல்ல, இரண்டும் இந்த அளவு வளர்ச்சி பெறப் பாடுபட்டவன் என்ற நெகிழ்ச்சியுடன் பேசுகிறேன்.

கொள்கையை விட்டுவிடுவோம் என்று சிலர் கூறும் போது, என் இதயம் வெடித்துவிடுவது போலாகிறது; அது போலவே விளைவுகளை ஆராயாமல், அல்லது எது நேரிட்டாலும் சரி என்ற போக்குடன் தடையை மீறுவோம் என்று சிலர் பேசும்போது, எனக்கு வேதனை பீறிட்டுக் கொண்டு வருகிறது.

கொள்கை தூய்மையானது – ஓர்நாள் வெற்றி பெற்றே தீரும் என்ற தன்மை வாய்ந்தது.

கழக அமைப்பு இதுவரை எங்கும் இவ்வளவு குறுகிய காலத்தில் எவரும் சுட்டிக்காட்டாத உன்னதத்தன்மை வாய்ந்தது. எப்படி மனம் வந்து அது உடைபட்டுப் போகட்டும் என்று பேசுகிறார்கள் என்பது எனக்குப் புரியவில்லை. கண்ணை இமை காப்பது போல இத்தனை ஆண்டுகளாக, காங்கிரஸ் எதேச்சதிகாரத்தின் தாக்குதல், பெரியாரின் பயங்கர தாக்குதல், நமக்குள்ளாகவே மூட்டிவிடப்பட்ட சதிச்செயல், இவைகளிலிருந்து கழகத்தைக் காப்பாற்றி வந்திருக்கிறோம்.

என்னைப் பொறுத்த வரையில், கழகத்தை வளர்த்து வருவதிலே நான் கண்ட கொண்ட மகிழ்ச்சி, பெருமையைவிட, வேறு எதிலும் கண்டதுமில்லை, கொண்டதுமில்லை.

கழகக் கூட்டங்களின் அளவு பெரிதாகிறது, எண்ணிக்கை வளருகிறது என்பதைக் காணும்போது ஒரு களிப்பு.

கழகப் பேச்சாளர்களின் தரம் உயருகிறது. மக்கள் அவர்களிடம் காட்டும் ஆதரவு வளருகிறது என்பதைப் பார்க்கும்போது ஒரு பூரிப்பு.

கழக ஏடுகள் எழில் பெறுகின்றன, என்பதைப் பார்க்க ஒரு களிப்பு.

கழகத் தோழர்கள் பஞ்சாயத்திலிருந்து பாராளுமன்றம் வரையில் இடம் பெற்றது காணும்போது ஒரு பெருமிதம்.

கழகத்தவர் மேயரானார், நாசருடன் கை குலுக்கினார், கழகத்தவர் மேயரானார், மாஸ்கோவில் வரவேற்பு பெற்றார், என்று படிக்கும் போது ஒரு பரவசம்.

இவைகளெல்லாம் இன்பக் கனவுகளா இன்றைய நிகழ்ச்சிகளா என்று மலைக்கும்படியான ஓர் நிலை ஏற்படுகிறது.

இந்தக் கழகத்தை, அது எப்படியோ ஆகட்டும் என்று கூற எப்படி மனம் இடம் தருகிறது என்று என்னால் புரிந்து கொள்ளவே முடியவில்லை.

தடைச்சட்டத்தை மீறினால், கழகம் என்ற ஒரு அமைப்பு உருத்தெரியாமல் அழிக்கப்பட்டுவிடுமே அதற்கு என்ன செய்வது என்று கேட்டால், போகட்டுமே என்று பதில் சிலர் கூறும்போது, நான் உள்ளபடி, சொல்லொனாத துயரத்துக்கு ஆளாகிறேன்.

ஆனால் அதேவிதமான வேதனை, மன உளைச்சல், கொள்கையை விட்டுவிடுவது என்பதிலே ஏற்படவில்லையா என்றும் அதைவிட அதிகம் எற்படுகிறது.

சிலருக்கு மட்டும் ஏனோ, அதுபோல இரு விஷயங்களிலும், எனக்கு ஏற்படுவது போன்ற மனக்குமுறல், வேதனை ஏற்படவில்லை. அத்தகைய மனப்போக்கைக் காணும்போதுதான், நான் மிகுந்த வேதனைக்கு ஆளாகிறேன்.

கொள்கையைக் காத்திட கழகம் அழிந்துபடட்டும் என்று கூறுவதும் சரி, கழகம் காத்திட கொள்கை அழியட்டும் என்று சொல்லுவதும் வேதனை தரத்தக்கன.

மிகப் பெரிய சிக்கலுக்கு, இதுவரை எங்கும் எந்தக் கட்சியும் பார்த்திராத ஒரு சிக்கலுக்கு, மிக அவசரப்பட்டு, எளிதான ஒரு பரிகாரம் தேட முற்படுவதன் விளைவு இது. பரிகாரம் தேடுவதிலே அவசரம் காட்டப்படுவது மட்டுமல்ல, நமக்குத் தோன்றுவது,

நமக்குத் தெரிவது மட்டுமே பரிகாரம் காணப் போதுமானது என்ற எண்ணமும் மேலோங்கிக் காணப்படுகிறது.

நிலைமை அப்படிப்பட்ட - அவசர முடிவுக்கு நம்மைத் துரத்துவதும் கூடாது. முடிவு எடுக்க நமக்குத் தோன்றிவிட்ட எண்ணம் மட்டுமே போதும் என்றும் இருந்துவிடக் கூடாது.

எனக்கு ஏற்பட்டுள்ள கவலை, இந்தச் சிக்கலைப் போக்க, நமது தோழர்கள் செலவிட்டுள்ள சிந்தனை போதுமானதாக இல்லை என்பதுதான்.

பொதுக்குழுவில் பேசிய பலரில், மிகப்பெரும்பாலோர், இது வரையில், இது குறித்து என்னிடம் இது பற்றிக் கலந்து பேசாதது, எனக்கு ஆச்சரியத்தை மட்டும் அல்ல, அதிர்ச்சியையே கொடுத்தது.

பொதுக்குழுவில் ஒரு முறை கூடி, கருத்து வழங்கி உடனே முடிவு எடுத்துவிடக்கூடிய அவ்வளவு சாதாரணப் பிரச்சினையா இது - அவ்வளவு எளிதான பிரச்சினையா இது? இல்லை, நண்பர்களே! இல்லை! எத்தனையோ இரவுகள் என்னைத் தூங்கவிடாமல் செய்து கொண்டிருக்கும் பிரச்சினை இது. இதற்குப் பரிகாரம் இதோ என்று சிலர், மிக வேகமாக, மிக அழுத்தமாக, மிக ஆவேசமாகக் கூறியபோது நான் திகைத்துப் போனேன்.

எந்த முடிவு எடுப்பதாக இருந்தாலும், அது, இந்த நாட்டு நிலையையே மாற்றி அமைக்கக்கூடிய அவ்வளவு, முக்கியத்துவம் வாய்ந்தது. எனவேதான், அவசரப்பட்டு முடிவு எடுப்பது, மிகுந்த தீமையைத் தரும் என்று நான் அஞ்சுகிறேன்.

பரிகாரம் தேடும்போது, பிரச்சினையின் சகல கோணங்களையும் கவனிக்க வேண்டும் - நமது விருப்பு வெறுப்பு மட்டும், நமது அளவுகோலாகி விடக்கூடாது.

நான் முன்பே சொன்னபடி, பிற கட்சிகள் இப்படிப்பட்ட நிலையிலே என்ன செய்தன என்று முன்மாதிரிக்காகப் பார்ப்பதற்கு இடமில்லை - ஏனெனில் எந்த கட்சிக்கும், அதன் மூலாதாரக் கொள்கையை அழிக்கக்கூடிய சட்டத்தைச் சந்திக்க வேண்டிய நிலை ஏற்பட்டதில்லை.

வெளிநாட்டு விடுதலை வரலாறுகளை, மிக அக்கறையுடன் இதற்காகப் படித்துப் பார்த்திருக்கிறேன்.

பல இடங்களிலும், விடுதலைக்கான வழி பலாத்காரம் நிரம்பியதாகத்தான் இருந்திருக்கின்றன - ஆகவே நாம் சந்திக்கும் சிக்கல் அங்கு எங்கும் ஏற்படவில்லை.

ஆனால் சில இடங்களில், அமைப்புகளின் பேரில் தடைவிதிக்கப் பட்டபோது, அமைப்புகளின் பெயரை மாற்றிக் கொண்டு, இயங்கியது தெரியவருகிறது:

உதாரணமாக, ஐயர்லாந்தில் கத்தோலிக்க சங்கம், என்ற விடுதலைக்கான அமைப்பு தடை செய்யப்பட்டபோது, அதிலிருந்து தப்பித்துக் கொள்ள, அந்த அமைப்பு தன் பெயரை கத்தோலிக்க தருமஸ்தாபனம் என்று மாற்றிக் கொண்டு இயங்க ஆரம்பித்தது.

நமது நாட்டில், உங்களில் சிலருக்கு நினைவிருக்கும்? என்று எண்ணுகிறேன், குடிஅரசு பத்திரிக்கைக்கு ஜாமின் கேட்டு சர்க்கார் தொல்லை கொடுத்தபோது,

பெரியார் அதன் பெயரை புரட்சி என்று மாற்றினார்; அதற்கும் தொல்லை வந்தபோது, பகுத்தறிவு என்று மாற்றினார்; நிலைமை சரியானதும், பழையபடி குடிஅரசு வெளியிட்டார்.

காங்கிரசுக்கு, வெள்ளையர்கள் நெருக்கடி உண்டாக்கிய போது, மகாஜன சங்கம் என்ற அமைப்பு இயங்கிற்று. காங்கிரஸ் தொண்டர்படை என்ற அமைப்புக்கு ஆபத்து உண்டாக்கப்பட்ட போது வானர சேனை என்று புதிய பெயருடன் அமைப்பு வேலை செய்ய முன்வந்தது.

இப்படி, பெயர் மாற்றிக் கொண்டு, அமைப்புகள் இயங்கி வந்தன - ஏனெனில், சர்க்கார் ஒரு அமைப்பை அழிக்க வேண்டும் என்ற சூதான எண்ணத்துக்காகவே ஒரு முறையை மேற்கொள்ளும்போது, அதிலிருந்து தப்பித்துக் கொள்ளும் தந்திரமுறையை மேற்கொள்ளுவதைத்தான் அந்த அமைப்புகள் கையாண்டன. அதனைக் கோழைத்தனம் என்றோ, கொள்கைத் தடுமாற்றம் என்றோ எவரும் கூறவில்லை, போர்முறை மாற்றம் என்றும், தந்திரத் திட்டம் என்றும் கூறினர்; வரவேற்றனர்.

ஆனால் இவைகள் எல்லாம் கூட, நாம் என்ன செய்ய வேண்டும் என்பதற்கு முழுவதும் வழிகாட்டுவனவாக இல்லை.

நமக்கு இன்று ஏற்பட்டுள்ள நிலைமைக்கு ஒரு பரிகாரம் காண வேண்டுமானால், நாம் இந்த நிலைமையை ஏற்படுத்திய காங்கிரஸ் கட்சி, முதலில் என்னென்ன செய்து பார்த்தது, என்பதைக் கவனிக்க வேண்டும்.

தடைச்சட்டம் எனும் இந்த ஆயுதத்தை நம்மீது வீசுவதற்கு முன்பு, காங்கிரஸ், நம்மை அழிக்க வேறு என்னென்ன முறைகளைக் கையாண்டன என்பதனைப் பார்த்தால்தான், ஒரு ஆளுங்கட்சி என்னென்ன செய்து பார்த்துத் தோற்று இந்த சட்டம் கொண்டு வந்திருக்கிறது என்பது புரியும். அது புரிந்தால்தான், நாம் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கை பற்றி நமக்கு பொறுப்பும் கவலையும் ஏற்படும்.

பிரிவினை பேசுவது இன்று நேற்று அல்ல.

தி. மு. கழகம் தோன்றிய பிறகிருந்துகூட அல்ல, திராவிடர் கழகமாக இருந்த போதே பேசத் தொடங்கினோம். இருபது ஆண்டுகளுக்கு மேலாகப் பேசிவரும் பிரிவினை பற்றி, இப்போது தடைச்சட்டம் போட வேண்டிய அவசியம் என்ன வந்தது? அவசரம் என்ன? என்பதை ஆராய வேண்டும்.

கழகம், ஒரு பலமான அமைப்பாக வளராது – யாரோ விரல்விட்டு எண்ணக் கூடிய நாலைந்து பேச்சாளர்களோடு நின்றுவிடும், என்று சிலகாலம் எதிர்பார்த்தார்கள். அது போல் ஆகவில்லை; அமைப்பு வளர்ந்தது.

படித்தவர்கள், நகர மக்கள் இவர்களோடு தான் கழகம் நின்றுவிடும், கிராமத்தார் வரவேற்க மாட்டார்கள், கிராமத்தார் ஆதரிக்காத வரையில், ஆபத்து எழாது என்று எண்ணினர். அதிலும் எமாந்தனர், எங்கும் அமைப்பு பரவிவிட்டது.

அமைப்பு எப்படியோ பரவிவிட்டது, ஆனால் தலைமைச் சண்டை ஏற்படும், உடைபடும் என்று எதிர்பார்த்தனர் – அதற்கு மாறாக கழகம் ஒரு குடும்பமாகிவிட்டது.

குடும்பத்திலேயே கலகம் மூட்டிவிட முடிகிறதே, கழகம் அதற்கு விதிவிலக்கா என்று எண்ணி வித்திட்டனர் - சதி முளைத்தது – அது காய்ந்ததே தவிர கழகம் அழியவில்லை. கழகத்திலே முன்னே நிற்பவர்களைக் கேவலப்படுத்தலாம், மாசு கற்பிக்கலாம், மதிப்பு மடியும் என்று எண்ணி, நாக்கில் நரம்பின்றி ஏசினர் - குறிப்பாக என்னை - என் மீது வீசப்படாத இழிமொழி இல்லை, சுமத்தப்படாத குற்றச்சாட்டு இல்லை – அறிவீர்கள். ஆனால் அதனால் என்னிடம் நீங்கள் காட்டும் பரிவு குறையவில்லை, வளர்ந்தது.
மேடையிலே பேசலாம், மக்கள் கைதட்டுவார்கள், ஆனால் ஓட்டு போடுவார்களா என்று பேசி உசுப்பிவிட்டார்கள் - தேர்தலில் ஈடுபட்டால் தகர்ந்து போவோம் என்று - அந்தக் களத்திலும் நாம் வெற்றி பெற்றோம்.
தேர்தலில் வெற்றி பெற்று என்ன? என்ன சாதித்துவிடப் போகிறார்கள்? என்று ஏசினர்
- அதனால் பாதகம் ஏற்படவில்லை. 15 - 50 ஆயிற்று.
எதிர்ப்பு பிரசாரம் செய்தனர் - பலிக்கவில்லை.
எதிர்ப்பு கூட்டணி அமைத்தனர் - பலன் இல்லை.
கலகம் விளைவித்தனர் - பலன் ஏற்படவில்லை.
போலீசால் தொல்லை, சட்டத்தைக் கொண்டு தாக்குதல் நடத்திப் பார்த்தனர் - தணலில் தங்கமாயிற்று கழகம்.
இவ்வளவு முறைகளிலும் தோல்வி ஏற்பட்ட பிறகே, இவ்வளவு வழிகளையும் கையாண்டு பார்த்தான பிறகே, காங்கிரஸ் சர்க்கார் தடைச்சட்டம் கொண்டு வந்தனர்.
கழகம் என்ற ஒரு அமைப்பு இருக்கும் வரையில், வளர்ச்சியைத் தடுக்க
முடியாது.
பிரசாரத்தினால், கொள்கையை அழிக்க முடியாது.
கழகமே அழிக்கப்பட வேண்டும்
என்பதுதான் இவர்கள் நோக்கம்.
பிரிவினைக் கொள்கையைத்தான் ஒழிக்க வேண்டும் என்று கருதி இருப்பார்களானால், நமது பிரசாரத்தை முறியடிக்க மேலும் மேலும் மும்முரமாக முயற்சிப்பார்கள். ஆனால் அவர்களின் உண்மையான நோக்கம், தி.மு. கழகம் என்ற ஜனநாயக அமைப்பு இனியும் இருக்கக் கூடாது - இருந்தால் காங்கிரஸ் கட்சிக்கு ஆபத்து என்பதுதான். எனவேதான் மிக ஜாக்ரதையாக,
பிரிவினைப் பேசக்கூடாது
என்று மட்டும் அல்ல,
பிரிவினை கொள்கை கொண்ட ஒரு கட்சியே இருக்கக் கூடாது

என்றும்,

பிரிவினை கேட்போர் தேர்தலில் ஈடுபடக் கூடாது

என்றும், தடைச்சட்டம் வகுத்திருக்கிறார்கள்.

இதிலே சில தோழர்கள், ஒரு பகுதியை மட்டும் கவனத்திற்கொண்டு பரிகாரம் காண முயற்சிக்கிறார்கள் - அதனால் விபரீதமான பரிகாரம் கூறுகின்றனர்.

எத்தனையோ விதவிதமான ஆயுதங்களைக் கொண்டு, நம்மை அழிக்கப் பார்த்து முடியாது போகவே, இப்போது, தடைச்சட்டம் எனும் புதிய ஆயுதம் வீசுகிறது காங்கிரஸ்.

எப்படி நம்மை ஒழிக்க காங்கிரஸ் ஒவ்வொரு கட்டத்தில் ஒவ்வொரு முறையையும், ஒவ்வொரு கருவியையும் நாடிற்றோ, அது போலவே நாமும், ஒவ்வொரு கட்டத்திற்கு ஏற்ற முறையையும் கருவியையும் உருவாக்கிக் கொள்ளவேண்டும்.

இதனை போர்முறைத் தந்திரம் (Tactics) என்று கூறலாம்.

தடை வருகிறது என்றதும், தடைச்சட்டத்துடன் கழகத்தை மோதவிட்டு, தடைச்சட்டம் உடைபடுகிறதா, கழகம் உடைபடுகிறதா பார்த்து விடுவோம் என்று பேசுவது சரியான போர்த்தந்திர முறையாகாது.

எப்படி, நமது கொள்கையுடன் மோதிக்கொள்ள, அதனைத் தாக்கித் தகர்க்க, காங்கிரசிடம் ஏக இந்தியா எனும் ஒரு கொள்கை இருந்தும் அந்தக் கொள்கையைக் கொண்டு நமது கொள்கையைத் தாக்கிட காங்கிரஸ் முயற்சி எடுத்துக் கொள்வதை மேற்கொண்டால் போதும் என்று இருந்துவிடவில்லையோ, எப்படி கழகம் என்ற நமது அமைப்பைத் தாக்கித் தகர்க்க காங்கிரஸ் என்ற தனது அமைப்பைப் பயன்படுத்தினால் போதும் என்று எண்ணி இருந்துவிடவில்லையோ, எப்படி ஏக இந்தியா எனும் கொள்கையையும், காங்கிரஸ் என்ற அமைப்பையும் களத்துக்கு அனுப்பாமல் தடைச்சட்டம் எனும் புதிய கருவியைக் களத்திலே, காங்கிரஸ் ஏவுகிறதோ , அதுபோலவேதான் நாமும், தடைச்சட்டத்தைத் தகர்க்க, அதனுடன் மோதிக்கொள்ள ஒரு புதிய கருவியை ஒரு போர்த்தந்திரத்தைக் கண்டாக வேண்டும்.

கொள்கையுடன் கொள்கை மோதுதல், அமைப்புடன் அமைப்பு மோதுதல் என்ற முறையிலே காங்கிரஸ், போர் நடத்தவில்லை; நடத்திப் பார்த்துத் தோற்றுப் போனதால் இப்போது, நமது கொள்கையுடன் அவர்கள் ஏவும் புதிய கருவி மோதிக்கொள்ளும் புதுமுறைப் போர்தந்திரத்தை அவர்கள் கையாளுகிறார்கள்.

இதை நாம் நன்கு உணராமல், கழகம் எனும் நமது அமைப்பை, அவர்கள் ஏவும் புதிய கருவியுடன் மோதிடச் செய்து, கழகத்தை அழித்துக் கொண்டோமானால், பிறகு கொள்கை, தங்கி இருக்க, நடமாட, வளர, செயலாக்கம் பெற, ஒரு அமைப்பு இழந்து, பிறகு மெள்ள மெள்ள உருக்குலைந்து போகும்.

கொள்கை எப்படியும் இருக்கும், என்றேனும் ஓர் நாள் எவர் மூலமாகவேனும், வெற்றி பெறும் என்பது, நம்பிக்கைப் பேச்சு, எழுச்சியூட்டும் முறை, தத்துவ விளக்கம்.

ஆனால் இன்று, கொள்கையும் கழகமும் ஒன்றோடொன்று பிணைக்கப்பட்டுப் போயுள்ள நிலை இருக்கிறது. கழகம் அழிக்கப்படும்போது, கொள்கைக்கு ஒரு தங்குமிடம், கிடைக்காது -

உடனடியாக் கிடைக்காது; பலருடைய உள்ளங்களிலே கொள்கை இருக்கும், ஆனால் செயலாற்றத்தக்க நிலை பெற ஒரு வடிவம் வேண்டும் - அந்த அமைப்பு தலைகாட்டும் போதெல்லாம், சட்டம் தாக்கும், அமைப்பை உடைக்கும், மற்றோர் அமைப்பு தேடி கொள்கை அலையும், மற்றோர் அமைப்பு ஏற்பட்டாக வேண்டும், யாரேனும் அவ்விதம் ஒரு அமைப்பு உடைபட்டதும் மற்றோர் அமைப்பு ஏற்படுத்தும் வேலையைச் செய்தபடி இருக்க வேண்டும்.

மற்றோர் முறையிலே இதனை விளக்குகிறேன்.

பாசறை என்பது ஒன்று. படைவரிசை என்பது மற்றொன்று. பாசறை பல படைவரிசைகளைக் கொண்டது மட்டுமல்ல, புதிய புதிய படைவரிசைகளை உண்டாக்கக்கூடியது. பாசறை அழிந்துபட்டுப் போகுமானால், புதிய புதிய படைவரிசைகளை அமைத்திட எளிதில் முடியாது.

களம் நோக்கி ஒரு படைவரிசை செல்லும் - அது அழிக்கப்பட்டாலோ அல்லது அது போதுமானதாகத் தோன்றாவிட்டாலோ, மேலும் படைவரிசையை, பாசறை அமைக்கும்.

எனவேதான் பாசறைகளை, படைவரிசையைக் காப்பதை விட மிக ஜாக்ரதையாகக் காப்பாற்றுகிறார்கள். எதிரியின் தாக்குதலுக்கு சுலபத்திலே இலக்காகிவிடக் கூடாது என்ற முறை இருக்கிறது. ஆங்கில காமாப்ளுவேஜ் என்று கூறுகிறார்கள், தந்திர முறைகளால், தன்னைத்தானே மறைத்துக் கொள்ளும் முறை கையாளப்படுகிறது.

போர் வீரர்களுக்குக்கூட இந்நாட்களில், களம் அமைந்துள்ள இடத்துக்கு ஏற்றபடியான, உடை, கருவிகள் தரப்படுவதைப் பார்த்திருப்பீர்கள். காடு சூழ் இடத்தை ஒட்டி களம் இருக்குமானால், புதர்களுக்குப் பின்புறமாக நின்று போரிட வேண்டுமானால், போரிடுபவர்களை எதிரிகள் சுலபத்திலே கண்டுபிடித்துத் தாக்கிடமுடியாதபடியும், விமானக் குண்டு வீச்சுக்கு இரையாக்கிட முடியாதபடியும், போரிடுபவர்களின் தொப்பியிலும் உடையிலும் தழை கொடி முதலியனவற்றை இணைத்துவிடுகிறார்கள் - தொலைவிலிருந்தோ, மிக உயரத்திலிருந்தோ எதிரிகள் பார்க்கும்போது செடி கொடி போலத் தோற்றமளிக்க வேண்டும், படைவீரர்கள் நடமாடுகின்றனர் என்று தெரிந்துவிடக் கூடாது என்பதற்காக.

வீணாக அழிக்கப்பட்டுவிடுவது; வீரமுமல்ல, போர்முறையுமல்ல.

தாக்கினோம், தாக்கப்பட்டோம் என்பதே போர் - தாக்க வந்தனர், தாக்கினர், சாய்ந்தோம் என்பது போர் முறை அல்ல.

தடைச்சட்டத்தை எதிர்த்துத்தாக்க நமக்கு படைவரிசை தேவை – ஒன்று இரண்டு அல்ல, பலப்பல தேவை.

ஒரு படை அழிக்கப்பட்டால் மற்றோர் படை என்ற முறையில், படை வரிசை கிளம்பியபடி இருக்க வேண்டும்.

போரும் ஓயக்கூடாது, படை வரிசை கிடைக்கவில்லை, கையிருப்பு செலவாகிவிட்டது என்ற நிலையும் ஏற்படக்கூடாது. அப்படி ஒரு நிலை ஏற்பட்டுவிட்டால், அடக்கு முறை ஆட்சி கொக்கரிக்கும். கொண்டாட்டம் நடத்தும்.

தடைச்சட்டத்தைத் தாக்கவேண்டும், விளைவு பற்றிக் கவலைப்படாமல், என்று பலர் பேசும் போது நான் பெரு மகிழ்ச்சி அடைகிறேன்.

ஆனால், எந்த முறையில் என்பதை அவர்கள் விளக்கும் போது, அது பாசறையையே போருக்கு அனுப்பும் தவறான முறைபோல, கழகமே தடைச்சட்டத்தை மீற வேண்டும் என்று கூறும் போது, பேரார்வம் நிரம்ப உள்ளவர்களிடம் ஆர அமர யோசிக்காத காரணத்தால் போர்தந்திர முறை Tactics இல்லையே என்று எண்ணுகிறேன் - ஏக்கம் அடைகிறேன்.

தடைச்சட்டத்தை தாக்க வேண்டும், படை கொண்டு – ஒரு படை அழிக்கப்பட்டால் மற்றோர் படை கொண்டு – தொடர்ந்து. பாசறை மீதே தாக்குதல் நடைபெற இடம் கொடுத்துவிடக்கூடாது - ஏனெனில் ஒரு படை அழிந்தால், மற்றோர் படை எழலாம், எழுப்பலாம்; பாசறை அழிக்கப்பட்டுப் போனால், புதிய பாசறையை அமைப்பது எளிதான காரியமுமல்ல, விரைவிலே செய்திடக்கூடிய செயலுமல்ல.

விதை நெல்லைச் சோற்றுக்குப் பயன்படுத்துவது போலாகிவிடும், தடைச்சட்டத்தைத் தாக்க, பாசறையைப் பயன்படுத்துவது.

தி மு கழகம் போன்ற பாசறையை அமைத்துக் கொண்டுள்ள நாம், இந்தப் பாசறையிலிருந்து, தடைச்சட்டத்தைத் தாக்க படை வரிசைகளை அமைத்து அனுப்பியபடி இருக்க வேண்டும். அப்படித் தொடர்ந்து படை வரிசைகளை நாம் அனுப்பிக் கொண்டிருக்க வேண்டுமானால் பாசறை, எதிரியின் இலக்குக்கு இரையாகாதபடி, Tactics, தந்திரமுறை அல்லது காமாப்ளுவேஜ், மாற்று உருவம் தேடிக் கொள்ளுதல் போன்றவைகளை மேற்கொள்ள வேண்டும்.

இவை பற்றி நான் எண்ணிய வண்ணம் இருக்கின்றேன் - எண்ண, எண்ண பலப்பல புதுப்புது கருத்துகள், முறைகள் எனக்குத் தோன்றுகின்றன.

தோன்றிடும் கருத்துகளெல்லாம், திட்டங்களாகிவிடாது. கருத்தாழமற்ற திட்டங்கள் கவைக்கு உதவாதனவாகிவிடும்.

ஆகவே, நிலைமைக்கு ஏற்ப, முறைகளை வகுத்து செயல்பட, என் திறமையிலும் தூய்மையிலும் நம்பிக்கை உங்களுக்கு இருக்குமானால், எனக்கு அந்த உரிமையை வழங்க வேண்டுகிறேன்.

நான் பொதுவாகப் பேசி வருவதைக் கவனித்திருப்பீர்கள். எனது நோக்கம்,

கொள்கையையும் விடக்கூடாது

கழகம் எனும் அமைப்பும் கலையலாகாது

நம்மிலே எவரும் கோழைகளாகி விடுதல் ஆகாது

என்பதாகும்.

எப்படி இவைகளை ஒரு சேரப் பெற வழி வகுப்பது என்பதுதான் எனக்கு இப்போது உள்ள சிக்கல் நிறைந்த சிந்தனை.

உங்கள் ஒவ்வொருவருடைய கருத்தும் எனக்கு ஒவ்வோர் விதத்தில் உதவி தருவனவாகவுள்ளன.

உங்கள் யோசனைகளில் ஒன்றிரண்டு தவிர, மற்ற எல்லாவற்றையும் நான் பெருமதிப்பு வைத்து கவனத்திற் கொண்டிருக்கிறேன் - உரிய நேரத்தில் உரியனவற்றைச் செயல்படுத்த எடுத்துக் கொள்ள எண்ணியிருக்கிறேன்.

பதவிகளை விட்டுவிடுவது என்ற யோசனைகூட என் மனதில் உள்ள பட்டியலில், இடம் பெறுகிறது என்பதனையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

கொள்கையையும் பாதுகாத்து, கழகமும் அழியாமல் இருக்கச் செய்வதற்காக, - இரண்டு உத்திகள் - இரு பிரிவுகள் – அமையலாம் என்று நான் கூறிவருகிறேன். அது பற்றிய விளக்கம் பெற என்னிடம் கலந்து பேசிடாத நண்பர்கள்; ஓரு தவறான கருத்துக்கு வந்திருப்பதிலே ஆச்சரியமில்லை.

நான் கருத்தில் கொண்டிடும் இரு பிரிவுகள் என்பது,

பாசறை – படைவரிசை

விதைநெல் – பயிர்

என்பது போன்றது. நண்பர்கள் கருதுவது போல,

வீரர்கள்
வீணர்கள்

தியாகிகள்
சுகபோகிகள்

தீவிரவாதிகள்
மிதவாதிகள்

எனும் பிரிவுகள் அல்ல.

பாசறையினர் சட்டத்தல் தாக்கப்படாத பாதுகாப்பு பெற்றுக்கொண்டு, சட்டத்தைத் தாக்கும் படைவரிசை அமைத்தபடி இருக்கும், போர் முறை அது. அது கோழைத்தனத்திற்குத் திரையிடுவது என்று எவரும் கருதிவிட வேண்டாம் என்று பணிவன்புடன் கூறிக் கொள்கிறேன்.

உதாரணத்துக்குச் சொல்கிறேன்; சட்டத்தால் தொடமுடியாத நிலையில் பாசறையை அமைத்துக் கொள்கிறோம்; அதிலே சிலர் எப்போதும் இருப்பார்கள் – அவர்களே இருப்பார்கள் – அவர்கள் மட்டுமே இருப்பார்கள் – படை வரிசைக்கு என்று வேறுசிலர் இருப்பார்கள், அவர்களின் வேலை களம் செல்வது, மடிவது என்று இருக்கும் என்று நினைத்துக் கொள்ள வேண்டாம்.

நான் திட்டமிட்டுக் கொண்டிருப்பது, அது அல்ல.

எனக்கு, சட்டத்தால் அழிக்கப்பட முடியாத பாதுகாப்புடன் ஒரு பாசறை வேண்டும் - அதிலே நிரந்தரமாக ஒரு பிரிவினர், இருந்திடுவர் என்பதற்காக அல்ல.

நாவலரும் நடராசனும் பாசறையினர், கருணாநிதியும் மதியும் படைவரிசையினர், நிரந்தரமான முறை இது என்பது அல்ல என் திட்டம்.

நாவலர் நடராசன் கருணாநிதி மதி, இவர்களைப் படைவரிசைக்கு அனுப்பி வைக்கும் பாசறையை ஒரு முறை அன்பழகனும் சோழனும் பார்த்துக் கொள்ளலாம், மற்றோர் முறை மற்றவர்களைப் படை வரிசைக்கு அனுப்பி வைக்கும் பாசறை வேலை நாவலரிடம் ஒப்படைக்கலாம் - எவரும் எந்தப் பிரிவுக்கும் நிரந்தரச் சொந்தக்காரர்கள் அல்ல - முறை மாறியபடி இருக்கும், இருக்க வேண்டும்.

அவ்விதம், உத்தி பிரியும் நிலைமை ஏற்படும்போது, நான் தி.மு.கழகத்திலிருந்து விலகி, படைவரிசை நடத்துவதாக இருக்கிறேன் - என் அழைப்பு கிடைக்கும் போதெல்லாம், பாசறைப் பிரிவிலிருந்து என் போலவே, விலகல் ஏற்படுத்திக் கொண்டு, நண்பர்கள் வரவேண்டும், படைவரிசை சட்டத்தைச் சந்திக்கும். அதன் விளைவுகளை நாம் அனுபவிக்கும்போது, பாசறையினர், மற்றோர் படைப்பிரிவைத் தயாரித்து அனுப்புவர்.

பாசறையினருக்கும் படைவரிசையினருக்கும் ஒரு தொடர்பு, எழுதாத ஒப்பந்தமாக இருந்துவர வேண்டும்.

இம்முறையில் என் எண்ணம் உருவாகியபடி இருக்கிறது. சில நண்பர்கள் வேகமான முடிவினை அவசரமாக எடுத்துக் கூறியது போல என்னால் கூற முடியாததற்காக வருந்துகிறேன்.

என்னால், நிலைமைகளுக்கு ஏற்றபடி முறைகளை வகுக்க முடியும் என்ற நம்பிக்கை உங்களுக்குக் குறைந்து போனாலும், எனக்கே என்னால் அப்படிச் செய்ய முடியாது என்ற எண்ணம் தோன்றினாலும், வேறு வழி கிடைக்கிறதா என்பது பற்றி யோசிக்கலாம்

என்னால், ஒரு முறையும் கூற முடியாது என்று எனக்கே தோன்றிவிடுமானால், நான் அதனைக் கூறத் தயங்க மாட்டேன் - எந்த வழியும் தெரியவில்லை, கழகம் எனும் அமைப்பு அழியட்டும் என்று விட்டுவிடுவோம், நடப்பது நடக்கட்டும், நாம் வரலாற்றில் இடம் பெறுவோம் என்று உங்களிடம் அறிவித்துவிடுவேன்.

நான், பல முறைகளை, நிலைமைகளுக்கு ஏற்ப மாற்றங்களைக் கையாள வேண்டும் என்று கூறும் போதும், அதற்காக வாதிடும்போதும், ஓரளவு மனச்சங்கடத்துடன்தான் இருக்கிறேன்.

பலருக்கு உள்ள தீவிரத்தின் அளவுக்கு தீரத்தின் அளவுக்கு, எனக்கு எழுச்சி இல்லை, என்று எங்கே உங்களிலே சிலராகிலும் கருதிவிடுகிறீர்களோ என்ற மனச் சங்கடம்தான்.

அந்த எண்ணம் ஏற்படுவதற்கும் காரணம், முன்பு, நம்முடன் இருந்த சிலர் உங்களில் சிலரிடம் அப்படி ஒரு கருத்தை ஊட்டினார்கள், என்பது எனக்கு நினைவிலிருப்பதுதான்.

ஒன்று தெளிவாக, திட்டவட்டமாகக் கூறிவிடுவேன், எவருடைய தீவிரத்துக்கும் மட்டமானதாக என்னுடையது இருக்காது - என்னுடைய தீவிரம், திட்டமிடப்பட்டதாக, நீண்ட நாள் நிலைத்திருக்கத் தக்கதாக, கோலிடும் பலனைப் பெற்றுத்தர தக்கதாக இருக்க வேண்டும் என்பதிலேயே நான் மிகுந்த கவலை கொண்டவன்.

அந்த என் முறை உங்களை இதுவரையில் தலைகுனிய வைத்ததில்லை; இனியும் அந்த நிலை ஏற்படாது.

அந்த முறை நமக்கு வீழ்ச்சியை, சரிவை, தளர்ச்சியைக் கொடுத்ததில்லை, இனியும் அப்படித்தான்.

கழகம் எனும் வடிவம் நிலைத்திடவும், கொள்கை உலவிடவும், போர் நடந்திடவும், ஏற்ற சூழ்நிலை உருவாக்கும் பணியில் என்னுடன் ஒத்துழைக்கும்படி உங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

தடைச்சட்டம் வந்தது, காங்கிரசை வீழ்த்தும் அளவு வளர்ந்திருந்த கழகம், புயலிற்சிக்கிய பெருமரமெனச் சாய்ந்தது என்ற நிலையும் ஏற்படாமல்,

பிரிவினை பேசாதே என்று சட்டம் கட்டளையிட்டது, மூச்சுப் பேச்சு இல்லை, பிரிவினைப் பேச்சே இல்லை என்ற அவச் சொல்லும் ஏற்படாமல், ஒரு நிலை ஏற்பட, வழிகாண வேண்டும். சிக்கலான பிரச்சினை - இதற்கு உங்கள் கருத்துகள் ஒவ்வொன்றும் எனக்கு ஒளி தருவனவாக நான் கொள்ளுகிறேன்.

நீங்கள் ஒவ்வொருவரும் இது பற்றி இதற்கு முன்பே சிந்தித்து பார்த்திருப்பீர்கள் என்ற போதிலும், இதுதான், முதல்முறை, இது பற்றி எவரெவர் என்னென்ன கருதுகிறார்கள் என்பதை ஒரு சேர நாமெல்லாம் கேட்டிடும் வாய்ப்பினைப் பெறுவது.

இதுவே போதும் என்று இருந்துவிடாதீர்கள் - மேலும் இது பற்றிச் சிந்தித்தபடி இருக்க வேண்டுகிறேன்.

எண்ணித் துணிக கருமம்

துணிந்தபின் எண்ணுவம் என்பது இழுக்கு

மின்னூல் வெளியீடு

இது ஒரு திராவிட வாசகர் வட்டம் வெளியீடு.
திராவிட வாசகர் வட்டம் முகநூல் முகவரி - https://www.facebook.com/groups/381671996011227/
அறிஞர் அண்ணாவின் கையெழுத்தில் அமைந்த மூல நூல் வெளியீடு: திமுக மூல நூல்: முதற்பதிப்பு, 2003.
தட்டச்சு உதவி: அசோகன் முத்து
அச்சு நூல் ஒளிவருடி உதவி: வெங்கடேஷ் மோதிலால்
மெய்ப்பு உதவி: யூசுப் பாசித்
மின்னூல் ஆக்க உதவி: பழூரான் விக்னேஷ் ஆனந்த்
மின்னூல் பதிவேற்றம்: இரவிசங்கர் அய்யாக்கண்ணு

திராவிட

வாசகர் வட்டம்